Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு + II விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,
இழந்த பற்களுக்கு நிகரான சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ளவும்,
பொருத்திக்கொள்ளவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக் கணேஷ்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2486

கிளை நிறுவனங்கள்

இல 91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 20 (06.09.2004) திங்கட்கிழமை இதழ் :339

## இன்னொரு கப்பலில் புலிகளுக்கு ஆயுதமாம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மேலும் ஒரு கப்பல் மூலம் ஆயுதங்களை கொண்டுவந்து இறக்கியுள்ளதாக கொழும்பின் இணையத்தளமொன்று நேற்றுத் தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் நெருங்கிய வட்டாரங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல் எனத் தெரிவிக்கும் அந்த இணையத்தளம், இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது -

மீன்பிடிப் படகொன்றின் மூலமாக பாலி கடற்பகுதி ஊடாகவே இந்தப் பெருமளவு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்புநிதி மீளளிக்கப்படவுள்ள 3000 பேரின் விபரங்கள் அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 1200 பேருக்கும், மூப்பின் அடிப்படையில் 1800 பேருக்குமாக மொத்தம் மூவாயிரம் பேருக்கு தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புச் செய்யப்படவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய பிரதேச செயலக ரீதியாக கடன் மீளளிப்புச் செய்யப்படுவோரின் எண்ணிக்கை வருமாறு -

நல்லூர் - 386, யாழ்ப்பாணம் - 194, கோப்பாய் - 325, உடுவில் - 222, மானிப்பாய் -225, தெல்லிப்பளை - 186, சங்கானை - 235, காரைநகர் - 30, வேலணை - 104, கரவெட்டி - 246, பருத்தித்துறை - 195, வடமராட்சி கிழக்கு - 30, சாவகச்சேரி - 249, பச்சிலைப்பள்ளி - 19, கிளிநொச்சி - 191, வவுனியா 41, முல்லைத்தீவு 82, மன்னார் - 40.

மேலும், தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புக் குறித்த நடைமுறைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன் விபரம் வருமாறு -

1) கடன் சான்றிதலாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப் பெறவேண்டும்.

2) ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்புநிதி மீளளிப்பு; பெயர் விபரம் உள்ளே


## வல்வை மயானத்தில் எலும்புக்கூடு கண்டுபிடிப்பு

வடமராட்சி - வல்லைவெளிப் பகுதியிலுள்ள மயானம் ஒன்றுக்கருகில் நேற்று மனித எலும்புக்கூடொன்று அந்தப் பகுதி மக்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பருத்தித்துறை வீதியிலிருந்து பிரிந்துசெல்லும் மண்டான் வீதியிலுள்ள மயானத்தின் பற்றைப் பகுதிக்குள்ளிருந்தே இந்த எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது.

கண்டுபிடிக்கப்பட்ட இந்த எலும்புக்கூடு பெண்ணினுடையதாக இருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. எலும்புக் கூட்டினருகே பெண்களின் உள்ளாடையொன்றும், வெளிறிய நிலையில் சேலையொன்றும் மற்றும் சில பொருட்களும் காணப்பட்டன. (202)

# இ.தொ.காவின் செயற்பாடுகளை விளங்கிக்கொள்ள முடியவில்லை!



## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

(கொழும்பு)

**இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயற்பாடுகள் குறித்து தெளிவாக விளங்கிக்கொள்ள முடியாத ஒரு நிலை உருவாகியுள்ளது என கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை தொழிலாளர் கங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு குறித்து ஒழுங்கான கருத்து எதனையும் வெளிப்படுத்த முடியாமல் உள்ளது.

தமிழ்மக்களின் இறுதியான கொள்கையாக வெளிப்பட்டு நிற்கும் இடைக்காலத்தன்னாட்சி அதிகார சபையை அவர்கள் புரிந்துகொண்டிருப்பது போல் தெரிகின்றது. ஆனால், அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கின்ற கொள்கைதான் எமக்கு விளக்கமற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

எந்த அடிப்படையில் அரசாங்கத்துக்கு ஆதர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் டீசல் விலை அதிகரிக்கவுள்ளதாம்!

(கொழும்பு)

டீசல் விலையை மேலும் 3 ரூபா 50 சதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்வதற்கான அனுமதியைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திடம் கோரியிருந்தது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ளதாலேயே டீசல் விலை அதிகரிக்கவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழின உயிர்க்கொலை நாள்

## மட்டக்களப்பு – அம்பாறையில் நேற்று துக்கதினம் அனுஷ்டிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று தமிழின உயிர்க்கொலை நினைவுநாள் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் மாவட்டத்தின் இயல்பு வாழ்க்கை முற்றாகச் செயலிழந்து வெறிச்சோடிக் காணப்பட்டது.

மட்டக்களப்பு நகரம், செங்கலடி, களுவாஞ்சிக்குடி உட்பட பல முக்கிய நகரங்களில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. தனியார் கல்வி நிலையங்கள் எதுவும் இயங்கவில்லை. போக்குவரத்துக்

# எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமையை வட.கிழக்கு மக்களுக்கு வழங்க வேண்டும்!

# எதிர்காலத்தை தீர்மானிக்கும் உரிமையை வட. கிழக்கு மக்களுக்கு வழங்க வேண்டும்!

## சமூக அமைப்பின் தலைவர் குமார் ரூபசிங்க அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மக்கள் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கக்கூடிய உரிமை அவர்களுக்கே வழங்கப்பட வேண்டும். அதன் ஆரம்பக் கட்டத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி யோசனை கொண்டுள்ளது என பொது சமூக அமைப்பின் தலைவர் குமார் ரூபசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இடைக்கால நிர்வாகம் என்பது இரண்டு தரப்பும் வெற்றிபெறக்கூடிய தீர்வைத் தரவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகாரமானது 25 வருட காலமாக இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தத்தின் பிரதிபலிப்பாகவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் வரலாற்றில் முதற்தடவையாக தமது யோசனையைச் சமர்ப்பித்துள்ளதால், அதற்கு மதிப்பளிக்க வேண்டும்.

சமஷ்டித் தீர்வு என்பது இலங்கைக்கு புதிய ஒன்றல்ல. 1920 ஆம் ஆண்டு எஸ்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல்; கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு!

(கொழும்பு)

கொழும்பு நகரத்திலுள்ள முக்கிய இலக்குகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த வாய்ப்புக்கள் இருப்பதால் - பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்திருப்பதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் திறந்த நினைவுக்கல் திடீரென காணாமற்போனது!


### சந்திரிகாவுடனான முறுகலே காரணம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமைக்கப்படவுள்ள கட்டடத்துக்காக - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்ட நினைவுக்கல் இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில்

(12 ஆம் பக்கம் பார்க்க)



தமிழின உயிர்க்கொலை நினைவுநாள் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் மாவட்டத்தின் இயல்பு வாழ்க்கை முற்றாகச் செயலிழந்து வெறிச்சோடிக் காணப்பட்டது.

மட்டக்களப்பு நகரம், செங்கலடி, களுவாஞ்சிக்குடி உட்பட பல முக்கிய நகரங்களில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. தனியார் கல்வி நிலையங்கள் எதுவும் இயங்கவில்லை. போக்குவரத்துக்கள் எவையும் நடைபெறவில்லை.

இதனால், மக்கள் நடமாட்டம் குறைந்தே காணப்பட்டது. படுவான்கரைக்கும் மட்டக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகள் பயிற்சி முடிந்ததும் வேலைவாய்ப்பு பெறுவதற்கு விண்ணப்பம் கோரப்படும்!

### பிரதி நிதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது அரசசேவைகளில் இணைத்துக்கொள்வதற்காக பயிற்சிகள் வழங்கப்படும் பட்டதாரிகளை அரசாங்க நிறுவனங்களில் வேலைக்கமர்த்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படவிருப்பதாக பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பிலபிட்டிய தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

பட்டதாரிகளுக்கு அரச நியமனங்களை வழங்குவதற்காக முதல் தொகுதியில் பெயர் வெளியிடப்பட்ட 17 ஆயிரம் பேருக்கு ஏற்கனவே பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)







இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.



EXPOAIR

Your friend in the skies...

# வலயமட்ட ஆங்கில தின போட்டி முடிவுகள் விபரம்!

(யாழ்ப்பாணம்)

வலயமட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள் அண்மையில் யாழ்.வலயக் கல்விப்பணிமனையால் வெளியிடப்பட்டுள்ளது.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரத்தின் நேற்றைய தொடர்ச்சி வருமாறு :

## தரம் - 12

முதலாம் இடம் - பி.டொ.டிலோசன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

இரண்டாம் இடம் - ஜெ.சகிதா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - சா.திருமகள் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

## தரம் - 13

முதலாம் இடம் - அ.றோசினி துஷாரா (திருக்குடும்ப கன்னியர் மடம்).

இரண்டாம் இடம் - இ.யாழினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

மூன்றாம் இடம் - மு.மேரி நிரோசினி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

## சொல்வதெழுதுதல்

## தரம் - 06

முதலாம் இடம் - சா.ஆரபி (திருக்குடும்ப கன்னியர் மடம்).

இரண்டாம் இடம் - சே.லிசி லெவிதா (திருக் குடும்ப கன்னியர் மடம்).

மூன்றாம் இடம் - வி.கோகிலன் (யாழ்.இந்துக் கல்லூரி).

## தரம் - 07

முதலாம் இடம் - சி.சிவாஜினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - நி.வாஹினி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

மூன்றாம் இடம் - ந.பிரணவன ரூபன் (யாழ்.இந்துக் கல்லூரி).

## தரம் - 08

முதலாம் இடம் - ம.ஜோன் சேவியர் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

இரண்டாம் இடம் - க.அஞ்சுகன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

மூன்றாம் இடம் - ச.கோபிகாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி).

## தரம் - 09

முதலாம் இடம் - அ.அறிவரசி (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

இரண்டாம் இடம் - ச.லக்ஷிகா (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை).

மூன்றாம் இடம் - தி.கஜனி (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்).

(தொடரும்)

## கிருஷ்ண ஜெயந்தி விழா

(சுதுமலை)

சாவகச்சேரி அப்பச்சி மாவடி ஸ்ரீ சக்கர ஆழ்வார் தேவஸ்தான கிருஷ்ண ஜெயந்திவிழா இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நாம பஜனை, சொற்பொழிவு, விசேட பூசை என்பன இடம்பெறும் எனவும், ஸ்ரீ சக்கர ஆழ்வார் மகிமை எனும் கருப்பொருளில் சி.கா.கமலநாதன் சொற்பொழிவாற்றவுள்ளதாகவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (91)

## எயிட்ஸ் நோய் விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் எயிட்ஸ் நோய்த் தடுப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று, தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் முதலானோருக்கு இன்று காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு தென்மராட்சி பிரதேச செயலக கட்டடத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

## தெய்வீக இசையரங்கு

(மானிப்பாய்)

நல்லூர் கந்தசாமி கோயில் உற்சவ காலத்தை முன்னிட்டு, நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் - நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.30 மணிவரை தெய்வீக இசையரங்கின் 17 ஆம் நாள் நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்வில் - சுகன்யா சிவாணந்தனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும். இதில், வயலின் ஏ.ஜெயராம், மிருதங்கம் கே.ஜெகன், முகர்சிங் கே.நந்தகுமார் ஆகியோருடன் பாட்டுக்கச்சேரி நடைபெறும். (100)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தையல் போதனாசிரியர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (25)

## இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெயர்ந்த சிறுவர்கள் மத்தியில் நடத்தப்பட்டு வரும் சித்திரப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில், இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசித்துவரும் சிறுவர்கள் பங்குபற்ற முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கான சகல உபகரணங்களும் போட்டி நடத்துபவர்களால் வழங்கப்படும் எனவும் தெரியவருகிறது.

இந்தப் போட்டியானது, கடந்த 3 ஆம் திகதி முதல் யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மாணவர் ஒன்றிய பணிமனைத் திறப்புவிழா!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் பணிமனை இன்று காலை 10.30 மணியளவில் யாழ். கோவில் வீதியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் - பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக - யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும், தமிழர் ஆசியர் சங்கத் தலைவர் த.பஞ்சலிங்கம், தமிழ மாணவர் ஒன்றிய ஆலோசகர் எஸ். வரதராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கம்பன் கோட்டம் முன்பாகத் திறந்துவைக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்தில் தமிழ் மாணவர் ஒன்றியம் தொடர்ந்து இயங்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. (63)


## வீடு தேவை

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு காரியாலய உபயோகத்துக்காக உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலை வீதி அல்லது அதன் சுற்றாடலில் ஓர் வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவையாக உள்ளது. இது சம்பந்தமாகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி : இணைப்பாளர்,

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு,
அறை எண் - 30,
யாழ்.போதனா வைத்தியசாலை,
தொ.பே. இல : 2225657

(925)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கைதடி மேற்கைச் சேர்ந்த வேலு மோகனதாஸ் என்பவருடைய கைத்தொலைபேசி - கைதடிச் சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையில், கடந்த புதன்கிழமையன்று பயணத்தின் போது (இல:0776192258- NOKIA) தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும். மனிதாபிமானத்துக்கு சன்மானம் வழங்கப்படும். வேலு மோகனதாஸ், (உதயநகர்) கைதடி மேற்கு. T.P: 0777 6623741. (C/3048)

வினாகிரி, அயடீன் உப்பு, ஐசிங் சீனி, பேக்கிங் பவுடர், அப்பச்சோடா, கொக்கோ பவுடர், சிற்றிக் அசிட் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல: 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## திரையரங்கில் இன்று











# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

| | | |
|---|---|---|
| 01. | உப.பரிசோதகர் | க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 02. | காவல்துறை உறுப்பினர் | க.பொ.த (சாதாரண) சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 03. | எழுதுவினைஞர் | க.பொ.த (சாதாரண) சித்தியுடன் 05 பாடங்களில் தமிழ்மொழி உட்பட திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| 04. | தட்டெழுத்து / சுருக்கெழுத்தாளர் | க.பொ.த (சாதாரண) சித்தியுடன் தட்டெழுத்து/சுருக்கெழுத்தில் தகைமையுடன் நிமிடத்திற்கு 15 சொல்லுக்குக் குறையாமல் தட்டெழுத்து செய்தல் வேண்டும். |
| 05. | அலுவலக உதவியாளர் | க.பொ.த (சாதாரண) தமிழ்மொழி உட்பட 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18-30 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 06. | கணனி இயக்குநர் | க.பொ.த (சாதாரண) சித்தியுடன் கணனி கற்கை நெறிப் பிரிவுகளில் அதிகூடிய பிரிவுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 07. | வரவேற்பாளர் | க.பொ.த (சாதாரண) சித்தியுடன் நல்லபேச்சுவன்மை இருத்தல் வேண்டும். வயதெல்லை 18-25 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 08. | மொழி பெயர்ப்பாளர் | ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 09. | சாரதி | இலகு/கனகரக வாகனங்கள் செலுத்துவதற்குரிய அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும். சாரத்தியத்தில் நல்ல அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும். வயதெல்லை 20-30 வரை. |
| 10. | மெக்கானிக் | மோட்டார் சைக்கிள்/டீசல் இயந்திரங்கள் திருத்துததிலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும். |
| 11. | களஞ்சியக்காப்பாளர் | க.பொ.த (சாதாரண தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 12. | நிர்வாக அலுவலர் | க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். 05 வருட அனுபவமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். |


**மேற்படி பதவிகளில் இணையவிரும்பும் விண்ணப்பதாரர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்திற்கு எதிர்வரும் 2004.09.08 முதல் 2004.09.30 வரை காலை 08.00 மணி தொடக்கம் 05.00 மணிவரை நேரில் சமுகம் அளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.**

பொறுப்பாளர்,
ஆளணிப்பிரிவு,
காவல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

(சி-2837)

# வன்னி இராணுவ தளபதியாக மேஜர் ஜெனரல் குலதுங்க

வன்னிப் பிராந்தியத்துக்கான இராணுவக்கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் பி.எஸ்.பி குலதுங்க கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றார்.



வன்னி இராணுவத் தலைமையகத்தில் இவருக்கு 11ஆவது கெமுனுவோச் படையினர் அணிவகுப்பு மரியாதையை வழங்கினர்.

தனது பதவியை பொறுப்பேற்ற பின்னர் மேஜர் ஜெனரல் குலதுங்க 21ஆவது, 56ஆது, டிவிசன்களின் தளபதிகள் மற்றும் மன்னார் மாவட்ட இராணுவக்கட்டளை அதிகாரி, சிரேஸ்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

1971இல் இராணுவத்தில் சேர்ந்த மேஜர் ஜெனரல் குலதுங்க, மிருசுவிலில் உள்ள 55ஆவது டிவிசனிலும் ஆனையிறவில் இருந்த 54 ஆவது டிவிசனிலும் பிரதிக்கட்டளை அதிகாரியாகவும் பின்னர் வரணியைத் தலைமையகமாகக் கொண்ட 52ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகவும் பணியாற்றியிருந்தார்.

2000 மே 1ஆம் திகதி மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்ட இவர் இராணுவ தலைமையகத்தில் அதிகாரிகளுக்கான பொதுக் கட்டளை அதிகாரியாக இருந்தே - வன்னி பிராந்திய கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேலும் 30 அகதிகள் மன்னார் திரும்பினர்

(மன்னார்)

பாக்குநீரிணையில் இந்தியக் கடற்படையினரின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இந்திய மீன்பிடிப் படகுகள் மூலம் ஈழத் தமிழ் அகதிகள் தொடர்ச்சியாக நாடு திரும்பிவருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழக அகதி முகாமில் வசித்துவந்த 30 பேர் தலைமன்னார் திரும்பினர்.

தமிழகம் தேவகோட்டை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் உள்ள அகதி முகாம்களில் வாழ்நத 5 குழந்தைகள் உட்பட 30 பேரே ராமேஸ்வரத்திலிருந்து படகுகளில் புறப்பட்டுத் தலைமன்னாரை வந்தடைந்தனர்.

இலங்கைக் கடற்படையினரிடம் தஞ்சமடைந்த இவர்களை, கடற்படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களை பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, அவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் பணித்தார்.

## அமெரிக்க, இந்திய உதவியுடன்

# விமான போக்குவரத்துக் கொள்கையை வகுப்பதற்கு அரசாங்கம் திட்டம் !

அமெரிக்க மற்றும் இந்திய நிபுணர்களின் உதவியுடன் இலங்கையின் விமானப் போக்குவரத்து தொடர்பான தேசியக் கொள்கை ஒன்று வகுக்கப்படவுள்ளதாக துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொது தகவல் தொடர்பு நிலையம் மற்றும் பராமரிப்புத் திணைக்களம் ஆகியவற்றை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இரத்மலானை விமான நிலையம் அடுத்த வருடம் பிராந்திய சர்வதேச விமான நிலையமாக மாற்றப்படும். அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்தின் நவீனமயமாக்கல் திட்டத்தின் அடிப்படையில் புதிய வெளியேறும் பாதை ஒன்றும் அமைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# புலிகளின் வீடியோ, ஓடியோ பிரதிகளை வைத்திருந்த இருவர் சென்னையில் கைது!

விடுதலைப் புலிகளின் வீடியோ மற்றும் ஓடியோ பிரதிகளை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பேரை தமிழகப் பொலிஸார் கைது செய்தனர்.

தமிழகம் -சென்னை, மண்ணடியைச் சேர்ந்த சிவானந்தம் மற்றும் முடிச்சூரைச் சேர்ந்த சவரணன் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கொழும்பிலிருந்து சென்னைக்கு சென்ற இவர்களை சென்னை விமானநிலையத்தில் வைத்து சோதனையிட்ட வேளையில் இவர்கள் விடுதலைப் புலிகள் சார்ந்த வீடியோ பிரதிகளை வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து இவர்குள் இருவரையும் விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் இன்ஸ்பெக்ரான குருசாமி விசாரணையை மேற்கொண்டார். இதன்பின் இவர்கள் இருவரும் கியூ பிரவு பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இருவரும் எவ்வாறு இவற்றைப் பெற்றனர், விடுதலைப் புலிகளுக்கும் இவர்களுக்கும், ஏதாவது தொடர்புள்ளதா போன்ற விபரங்களை கியூ பிரிவு பொலிஸார் விசாரணை செய்யவுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் சில காலத்துக்கு முன்னர் கொழும்பில் புடைவைக் கடை வைத்திருக்கும் தமது நண்பரை சந்திக்க கொழும்பு சென்றதாகவும், பின்னர் அங்கிருந்து சென்னைக்கு நேற்று முன்தினம் திரும்பிச் செல்கையில், சென்னை விசமான நிலையத்தில் வைத்து இந்த பொருட்களுடன் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

# அரசாங்கத்துக்கு இ.தொ.க. ஆதரவு தமிழ் தேசிய கூட்டமைப்பு அதிருப்தி!

தமிழ் மக்களின் ஐக்கியத்தை முன்வைத்து, அதற்காக உழைத்த மறைந்த தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் எண்ணப்பாட்டை, தற்போது தொழிலாளர் காங்கிரஸ் எடுத்துள்ள முடிவு மழுங்கடித்துள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசுக்கு அதரவுதர முன்வந்துள்ளமை தமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு கருதுகிறது.

தொழிலாளர் காங்கிரஸ், அரசாங்கத்துடன் இணைந்து பெரும்பான்மையப்பெற உதவி புரிந்துள்ளதன் மூலம் சமாதான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்று கூறுவது ஏற்புடையதல்ல.

விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால அதிகார சபை ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டும் என அரசாங்கத்தின் அமைச்சராக இருந்த பொழுதே அமரர் தொண்டமான் வலியுறுத்தியிடுத்தார். தற்போது நிபந்தனையற்ற வகையில் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளமை கவலையளிக்கிறது.

இடைக்கால நிர்வாகசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்தைகளை அரசாங்கம் முன்னெடுப்பதற்கு, தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கியிருந்தால் அதனை தமிழ் மக்களுக்கு சாதகமான நிலைப்பாடாககொள்ள முடியும். ஆனால், தற்போது இந்த விடயம் குறித்தும், ஏனைய பல விடயங்கள் குறித்தும் தெளிவான நிலைப்பாடுகளை அறிவிக்காமல் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க முன் வந்துள்ளமை சமாதான முயற்சிகளுக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தலாம்.

அமைச்சரவையில் இடம்பெறாத தொழிலாளர் காங்கிரஸானது நிபந்தனையற்ற வகையில் அரசுக்கு ஆதரவு வழங்க முன்வந்தமையானது அந்தக் கட்சிக்கு வாக்களித்த மலையக மக்களுக்கும் நன்மை தரக்கூடிய விடயம் அல்ல.

தொழிலாளர் காங்கிரஸின் இந்த முடிவின் மூலம் எதிர்கட்சிவரிசை பலம் குறைவதோடு, தமிழ் மக்களின் பேரம் பேசும் வலு குறைவடைந்துள்தாகவே கருதுகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகித்ததுடன், கூட்டு எதிர்க் கட்சிகள் முன்னணியிலும் அங்கம் வகித்துவந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் தமது முடிவை ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எவருக்கும் தெரிவித்திருக்கவில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்களில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் மோசடி வழக்கு விசாரணை நீதியரசர் விக்னேஸ்வரன் விலகல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் பொதுத் தேர்தல் நீதியாகவும், சுதந்திரமாகவும் இடம்பெறவில்லையென்று ஆட்சேபித்துத் தாக்கல் செய்த உரிமைமீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இந்த வழக்கை உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நீதியரசர்களான வி.வீரசூரிய, சீராணி திலகவர்த்தன ஆகியோர் விசாரணைக்கு எடுத்தனர்.

இந்த வழக்கைத் தனிப்பட்ட காரணங்களுக்காகத் தாம் தொடர்ந்து விசாரிக்கப் போவதில்லையென்று நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மன்றில் தெரிவித்தார்.

இந்த மனுக்களைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி உட்பட ஈ.பி.டி.பியைச் சேர்ந்த இருவர் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த விசாரணையின் போது வீ.ஆனந்தசங்கரியின் சார்பில் சட்டத்தரணி ஜே.சி.வெலியமுன ஆஜரானார். ஏனைய இரு மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகளான கே.திரணகம, எம்.ஜே.ஏ.ஹசன் ஆகியோர் ஆஜரானார்கள்.

இந்த மூன்று மனுக்களிலும் முக்கிய பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டிருக்கும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களின் சார்பில் சட்டத்தரணி மோகன பாலேந்திராவின் அனுசரணையுடன் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜரானார்.

# சாதகமான பதில் கிடைக்கும்வரை வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும்

தமது போராட்டத்துக்குச் சாதகமான தீர்வு ஒன்று கிடைக்கும்வரை தொடர்ந்து வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக, அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியில் சிரேஷ்ட ஆலோசகர் பாலபத்த பெண்டி மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேச்சுக்கள் பலனளிக்கவில்லை என்று அனைத்துப் பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்க ஒன்றிணைந்த கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. இதேவேளை பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களது போராட்டம் தொடர்பாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு, துணைவேந்தர்கள் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளது.

கல்விசாரா ஊழியர்களது சம்பளம், அரசாங்கத்தின் ஏனைய திணைக்களங்களிலுள்ள ஊழியர்களது சம்பளத்துக்கு நிகரக உயர்த்துவது தொடர்பாக, இந்தப் பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இ.தொ.காவின் முடிவை ஜே.வி.பி வரவேற்கிறது!

(லண்டன்)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன், ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்துகொள்ள எடுத்த முடிவு குறித்து, ஜே.வி.பி வரவேற்புத் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச பி.பி.சியின் சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே இ.தொ.கா.வின் முடிவு குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்தப் பேட்டியில் - அவர் மேலும் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கின்ற இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிலைப்பாடு தொடர்பாக ஜே.வி.பிக்கு பிரச்சினை கிடையாது.

ஏனென்றால், ஜே.வி.பி ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கு எப்பொழுதும் ஆதரவாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# படையிலிருந்து தப்பியோடியோரை இராணுவத்திலிருந்து நீக்க முடிவு

(கொழும்பு)

இராணுவத்தை விட்டு தப்பிச் சென்ற அனைவரையும் இராணுவத்திலிருந்து நீக்கிவிட, பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் தமது சேவை தொடர்பான விபரங்களை நேரடியாகவோ, கடிதம் மூலமாகவோ- பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகத்துக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதற்கென எதிர்வரும் 15 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் மூலம் இராணுவசேவையிலிருந்து தப்பிச்சென்றவர்கள் கௌரவமாக ஓய்வுபெற முடியும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

2003ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி வரை இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற படையினராகக் கணிக்கப்படுபவர்களின் கடிதங்களைக் கையளிப்பதற்கு இந்த மாதம் 13ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு 3, மலே வீதியில் அமைந்துள்ள இராணுவத்தொண்டர் இணைப்பு, மத்திய நிலையத்துடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றோர் மீண்டும் இராணுவத்தில் இணைந்துகொள்ள விரும்பினால், அதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# 10 ஓட்டங்களால் பாகிஸ்தானை அவுஸ்ரேலிய அணி வீழ்த்தியது!



இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நட்வெஸ்ட் இன்ரநஷனல் போட்டியில் பாகிஸ்தான் அணியை 10 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணி தோற்கடித்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அவுஸ்ரேலியாவை அழைத்தது.

அவுஸ்ரேலியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹேடன் மற்றும் அன்ரு சைமன்ஸ் ஆகியோரின் அபாரமான துடுப்பாட்டத்தால் அவுஸ்ரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சைமன்ஸ் 103 பந்துகளில் 1 சிக்ஸர், 9 பவுண்டரிகளுடன் 104 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஹேடன் 52, ஹடின் 13, பொன்டிங் 4, மார்ட்டின் 26, லேமன் 9, கிளார்க் 31, வட்சன் ஆட்டமிழக்காமல் 7 ஓட்டங்களைப் பெற்றனர்.

23 உதிரி ஓட்டங்களை பாகிஸ்தான் அணியினர் விட்டுக்கொடுத்தனர்.

மொகமட் சமி 10 ஓவர்கள் பந்து வீசி 56 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும், அக்தர் 8 ஓவர்களில் 70 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டையும், மலிக், அப்ரிடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

270 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, அவுஸ்ரேலியாவுக்கு பெரும் சவாலாகவே இருந்தது.


யாசிர் ஹமீட், இன்சமாம், யுகானா ஆகியோரின் அபாரமான ஆட்டத்தால் பாகிஸ்தான் அணி வெற்றிபெறக் கூடிய சாத்தியப்பாடுகள் இருந்த



போதும், பின்வரிசை வீரர்களின் விக்கெட்டுக்கள் வீழ்ந்ததால் 48.2 ஓவர்களிலேயே பாகிஸ்தான் அணி 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

யாசிர் ஹமீட் 47, இம்ரான் பர்கத் 11, அப்ரிடி 0, மலிக் 2, இன்ஸமாம் 72, யுகானா 88, அப்துல் ரசாக் 15, மொயின் கான் 0, நவீட் உல் ஹசன் 2, மொகமட் சமி 10, அக்தர் ஆட்டமிழக்காமல் 2 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் 9.2 ஓவர்களில் 47 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கஸ்பரோவிச் சாய்த்



தார். ஜிலெஸ்பி 2, லீ 1, சைமன்ஸ் 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## கற்பழிப்புப் புகாரில் குத்துச்சண்டை வீரர்

கற்பழிப்புப் புகாரில் பிரபல குத்துச்சண்டை வீரர் ஒருவர் சிக்கியுள்ளார். அவரது பெயர் ரிகார்டோ மயோர்கா.

நிக்ரகுவா நாட்டைச் சேர்ந்த அவர் குத்துச்சண்டையில் சம்பியன் பட்டம் பெற்றவர். அடுத்த மாதம் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள குத்துச்சண்டைப் போட்டியில் பங்கேற்கவிருந்தார்.

இந்த நிலையில், அவர் மீது 22 வயதுப் பெண் ஒருவர் பரபரப்பு புகார் தொடுத்தார். அதில் அவர் ஹோட்டலில் தங்கியிருந்த என்னை மயோர்கா பலாத்காரம் செய்து கற்பழித்து விட்டார் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கற்பழிப்புப் புகாரைத் தொடர்ந்து குத்துச்சண்டை வீரர் மயோர்காவை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்திவருகின்றனர்.

# ஐ.சி.சி சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் இங்கிலாந்தில் 10 ஆம் திகதி ஆரம்பம்

## போட்டி அட்டவணை

| திகதி | அணிகள் | இடம் |
|---|---|---|
| செப் 10 | இங்கிலாந்து - சிம்பாப்வே | எட்பாஸ்டன் |
| | நியூஸிலாந்து - அமெரிக்கா | லண்டன் |
| செப் 11 | இந்தியா - கென்யா | ரோஸ்பவுல் |
| செப் 12 | தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் | எட்பாஸ்டன் |
| செப் 13 | அவுஸ்ரேலியா - அமெரிக்கா | ரோஸ்பவுல் |
| செப் 14 | பாகிஸ்தான் - கென்யா | எட்பாஸ்டன் |
| | இலங்கை - சிம்பாப்வே | லண்டன் |
| செப் 15 | மேற்கிந்தியத்தீவுகள் - பங்களாதேஷ் | ரோஸ்பவுல் |
| செப் 16 | அவுஸ்ரேலியா - நியூஸிலாந்து | லண்டன் |
| செப் 17 | இலங்கை - இங்கிலாந்து | ரோஸ்பவுல் |
| செப் 18 | தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத்தீவுகள் | லண்டன் |
| செப் 19 | இந்தியா - பாகிஸ்தான் | எட்பாஸ்டன் |
| செப் 21 | அரையிறுதிப் போட்டி | |
| | பிரிவு 'ஏ' முதலிடம் - பிரிவு 'டி' முதலிடம் | எட்பாஸ்டன் |
| செப் 22 | அரையிறுதிப் போட்டி | |
| | பிரிவு 'பி' முதலிடம் - பிரிவு 'சி' முதலிடம் | ரோஸ்பவுல் |
| செப் 25 | இறுதிப் போட்டி | லண்டன் |

மினி உலகக் கிண்ண கிரிக்கெட் என்று அழைக்கப்படும் ஐ.சி.சி சம்பியன் போட்டிகளை இம்முறை இங்கிலாந்து ஏற்று நடத்தவுள்ளது. வரும் 10 ஆம் திகதி தொடங்கும் இந்தத் தொடரில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற 10 அணிகள், ஐ.சி.சி சலஞ்ச் - 2004 தொடரில் கென்யா மற்றும் அமெரிக்கா என 12 அணிகள் பங்கேற்கின்றன.

அமெரிக்கா முதன்முறையாக சம்பியன்ஸ் டிரொபி தொடரில் பங்கேற்கிறது. இந்த அணியின் முதல் சர்வதேச தொடர் இது என்பது குறிப்பிடத்தக்கது. 12 அணிகளும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

'ஏ' பிரிவில் அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, அமெரிக்கா

'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ்

'சி' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், கென்யா

'டி' பிரிவில் இலங்கை, இங்கிலாந்து, சிம்பாப்வே

போட்டிகள் மழையால் பாதிக்கப்பட்டால் அடுத்த நாள் போட்டிகளை நடத்தும் விதத்தில் அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. ஆட்டத்தின் இடையே மழை குறுக்கிட்டாலும், மறுநாள் போட்டிகள் தடைப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கும். இது இறுதிப் போட்டிக்கும் பொருந்தும்.

லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்ற 2 அணிகளோடு ஒரு முறை மோதவேண்டும். புள்ளிகள் மற்றும் ரன் விகிதாசார அடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தைப் பிடிக்கும் அணிகள் நேரடியாக அரையிறுதிக்குத் தகுதிபெறும்.

ஒவ்வொரு பிரிவிலும் ஒரு சாதாரண அணி ஒன்று இடம்பெற்றுள்ளதால் பலம் வாய்ந்த அணிகள் மோதும் போட்டியே அரையிறுதிக்குத் தகுதிபெறும் அணியை நிர்ணயிக்கும்.

உதாரணமாக இந்தத் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் மோதும் போட்டியே 'சி' பிரிவில் அரையிறுதிக்குள் நுழையும் அணியை நிர்ணயிக்கும்.




# ஐ.சி.சி கிண்ணப் போட்டி கவாஸ்கர் பங்கேற்பார்!

மினி உலகக் கோப்பை என்று அழைக்கப்படும் ஐ.சி.சி சம்பியன் போட்டியில் முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக நட்சத்திர வீரர் டெண்டுல்கர் விளையாடமாட்டார்.

டெண்டுல்கருக்குப் பதிலாக ரோகன் கவாஸ்கர் சேர்க்கப்படவுள்ளார். அவர் ஏற்கனவே ஹொலன்டில் நடந்த 3 நாடுகள் போட்டி மற்றும் இங்கிலாந்து தொடருக்கான அணியில் உள்ளார்.

இங்கிலாந்தில் உள்ள கவுண்டி போட்டியில் சிறப்பாக ஆடி வருவதால் தினேஷ் மொங்கியாவுக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என்று முதலில் கூறப்பட்ட போதிலும், ஏற்கனவே ரோகன் கவாஸ்கர் அணியில் இருப்பதால் அவரையே நீடிக்கச் செய்யலாம் என்று கூறப்படுகிறது.

ஐ.சி.சி போட்டிக்கான அணியில் இடம்பெற்ற வீரர்கள் காயமடைந்ததால் வேறு வீரர்கள் தேர்வு செய்யலாம் என்று ஐ.சி.சி.அனுமதி வழங்கியது. இதனால் டெண்டுல்கருக்கு பதிலாக வேறு ஒரு வீரர் தேர்வு செய்யப்படுகிறார்.

# ஐ.சி.சி சம்பியன் போட்டியில் தொடக்க வீரராக ஷேவாக் களமிறங்குவது சந்தேகம்



(லண்டன்)

இங்கிலாந்துடனான தொடரிலும் மோசமாக ஆடி வருவதால் எதிர் வரும் ஐ.சி.சி சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டியில் வீரேந்திர ஷேவாக் தொடக்க வீரராக களமிறங்குவதில் சந்தேகம் எழுந்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிராக ஓவலில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2 ஆவது ஒருநாள் ஆட்டத்தில் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

தொடக்க வீரராக அவர் சோபிக்காததால் அணி 70 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

இதையடுத்து கடந்த 4 ஆண்டுகளாக தொடக்க வீரராக விளையாடி வரும் ஷேவாக் சம்பியன் கிண்ண போட்டியில் பின்வரிசைக்குத் தள்ளப்படலாம் எனத் தெரியவருகிறது.

பாகிஸ்தானில் முச்சதம் அடித்தது உட்பட கடந்த சீசனில் சிறப்பாக ஆடிய ஷேவாக்குக்கு இந்த சீசன் மோசமாகவே அமைந்துள்ளது.

இந்த சீசனில் கராச்சியில் கடந்த மார்ச்சில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் 79 ஓட்டங்களைக் குவித்ததற்குப் பிறகு 14 ஆட்டங்களில் மொத்தமாக 256 ஓட்டங்களை மட்டுமே பெற்றுள்ளார்.

இவ்வாறு மோசமான நிலையில் தொடக்க வீரர் இருப்பதால் அணியும் பின்னடைவு கண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க ஓபன் ரெனிஸ்

# விம்பிள்டன் சம்பியன் ஷரபோவா அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்!



நியூயோர்க்கில் நடைபெற்று வரும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியில் முன்னணி வீரர் கார்லோஸ் மோயா, விம்பிள்டன் சம்பியன் ஷரபோவா ஆகியோர் அதிர்ச்சித் தோல்வியடைந்தனர்.

உலகின் 5 ஆம் நிலை வீராங்கனையான லிண்ட்சே டேவன்போர்ட் (அமெரிக்கா) 3 ஆவது சுற்றில் ரஷ்யாவைச் சேர்ந்த எலீனா போவினாவை எதிர்கொண்டார். இதில் டேவன்போர்ட் 7-6 (9-7) 6-2 என்ற நேர் செட் கணக்கில் வென்று 4 ஆவது சுற்றுக்கு தகுதிபெற்றார்.

உலகின் முதல் நிலை வீராங்கனையான ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம்) 3 ஆவது சுற்றில் அமெரிக்காவைச் சேர்ந்த லிசா ரேமண்டை 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வென்றார்.

மற்றைய ஆட்டங்களில் சுவெட்லனா (ரஷ்யா) நாடியா பெட்ரொவா (ரஷ்யா) ஆகியோர் வென்று 4 ஆவது சுற்றுக்குத் தகுதிபெற்றனர்.

விம்பிள்டன் சம்பியனான மரியா ஷரபோவா 3 ஆவது சுற்றில் யாருமே எதிர்பார்க்காத வகையில் அதிர்ச்சிகரமாகத் தோற்றார்.


27ஆம் நிலை வீராங்கனையான மேரி பியர்ஸ் (பிரான்ஸ்) 4-6, 6-2, 6-3, என்ற செட் கணக்கில் ஷரபோவாவைத் தோற்கடித்தார்.

உலகின் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர் (சுவிற்சர்லாந்து) 3 ஆவது சுற்றில் பிரான்சைச் சேர்ந்த பேப்ரைஸ் சான்டரோவை எதிர்கொண்டார். இதில் பெடரர் 6-0, 6-4, 7-6 (9-7) என்ற செட் கணக்கில் வென்று 4 ஆவது சுற்றில் நுழைந்தார்.

6 ஆம் நிலை வீரரான ஆந்த்ரே அகாசி (அமெரிக்கா) 3 ஆவது சுற்றில் 6-4, 6-2, 6-3 என்ற செட் கணக்கில் ஜிரிநோவக்கை (செக் குடியரசு) தோற்கடித்தார்.

ஹென்மன் (இங்கிலாந்து) 4-6, 6-3, 5-7, 6-4, 6-3, என்ற செட் கணக்கில் மைக்கல் தபராவை (செக் குடியரசு) வென்றார்.

மற்றைய ஆட்டங்களில் நிக்கோலஸ் கெய்பர் (ஜெர்மனி), சர்விங் (ஆர்மேனியா) ஆகியோர் வென்று 4 ஆவது சுற்றில் நுழைந்தனர்.



உலகின் 3 ஆவது நிலை வீரரான கார்லோஸ்மோயா (ஸ்பெயின்) 3 ஆவது சுற்றில் அதிர்ச்சிகரமாக தோற்றார்.

பெல்ஜியத்தை சேர்ந்த ஒலிவர் ரோச்சஸ் 4-6, 6-4, 6-3, 6-7 (5-7), 7-5 என்ற செட் கணக்கில் மோயாவை வென்று 4 ஆவது சுற்றில் நுழைந்தா.

## பதக்கம் குவிக்க தயாராகும் சீனா



(பெய்ஜிங்)

அடுத்த ஒலிம்பிக் போட்டி 2008 ஆம் ஆண்டு சீனாவில் நடைபெறவுள்ளது.

இதில் பதக்கங்களைக் குவிக்கவேண்டும் என்று சீனா இப்போதே தீவிர முயற்சியில் இறங்கிவிட்டது. அதுவும் ஜிம்னாஸ்டிக் போட்டியில் பதக்கங்களை அள்ளிக் குவிக்கத் திட்டமிட்டுள்ளது.

சீனாவிலுள்ள ஹூபே மாகாணத்தில் சியாங்டாவோ நகரில் ஜிம்னாஸ்டிக் பள்ளி உள்ளது. இந்தப் பள்ளியில் 4 வயது முதல் 10 வயது வரை உள்ள சிறுவர் சிறுமிகள் 100 இற்கும் மேற்பட்டவர்கள் தங்கி பயிற்சியெடுத்து வருகிறார்கள். ஏற்கனவே பல ஜிம்னாஸ்டிக் சம்பியன்களை உருவாக்கியுள்ளது, இந்தப் பள்ளி.

# திண்மக்கழிவுகளை அகற்றுவது தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில் திண்மக் கழிவுகளை அகற்றுவதில் ஏற்பாடும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று, இன்று மாலை 3 மணியளவில் நல்லூர் பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நல்லூர் பிரதேசசபைக் குட்பட்ட சனசமூக நிலையங்கள், இந்தப் பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் என்பன கலந்துகொள்ளவுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் ஆர்வமுள்ள பொதுமக்களும் கலந்துகொள்ளமுடியும். இதில் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான வழிமுறைகள், அவை தேங்குவதால் ஏற்படும் தீங்குகள், அதை அகற்றுவதில் ஏற்படும் சிக்கல்கள் என்பன தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

எனவே, பொதுமக்களும் இதில் கலந்துகொள்வதன்மூலம் இது தொடர்பான பல பிரச்சினைகளுக்குத் தர்வுகாணமுடியும் என நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் குடிநீர், சுகாதாரம் குறித்து ஆய்வு!

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் குடிநீர் விநியோகம் சம்மந்தமாகவும், சுகாதார மேம்பாடு சம்பந்தமாகவும் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கீடு செய்துள்ளது. பாரிய நீர் விநியோகத் திட்டம் அமைப்பதற்காக முன்னெடுக்கப்படும் இந்த ஆய்வுகளுக்குரிய காரியாலயம் அமைப்பதற்குரிய இடம் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ளதோடு அதற்குரிய உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுகள் அநேகமாக இந்தவருட இறுதியில் ஆரம்பித்து ஒரு வருடம் வரை நடைபெறவுள்ளது. இந்த ஆய்வுகள் மூலம் மக்களுக்குரிய குடிநீர் விநியோகம் செய்வதோடு சுகாதார வசதிகள், கழிவுநீர், கழிவுகள் அகற்றல் போன்றவையும் இணைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டங்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் இடம்பெறுகிறது எனவும் தெரிய வருகிறது. (55)

# சின்னஞ்சிறு செய்திகள்

## தொழிற்சாலைகளின் விபரம் கோரப்பட்டுள்ளது

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச பண்டத்தரிப்பு உப அலுவலக பிரிவுகளில் 2004 ஆம் ஆண்டுக்கான தொழிற்சாலைகளின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளின் விபரம், தன்மை, பெயர், முகவரி உரிமையாளர் பெயர் முகவரி ஆகியவற்றை அனுப்புமாறு மாவட்ட தொழிற்சபை அதிகாரியால் - பிரதேச, நகரசபைகளுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (91)

## மானிப்பாய் மெமோறியலில் நவோதயா வாரம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நவோதயா பாடசாலை வாரம் இன்றுமுதல் தொடர்ந்து ஐந்து நாட்கள் இடம்பெறவுள்ளது.

தேசத்தின் முன்னேற்றத்துக்கு முழுமையான பங்களிப்புச் செய்யக் கூடிய மாணவர் சமுதாயம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் - சமூக பங்கேற்பு தினம், மாணவ தலைவர் தினம், சமய மற்றும் விழுமிய தினம், மொழி தொழில்நுட்ப தினம், மாணவர் ஆற்றல்கள் மற்றும் செயற்பாட்டுத்தினம் என ஐந்து நாட்கள் இது கடைப்பிடிக்கப்படவுள்ளது.

நவோதயா துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பாடசாலை இணைக்கப்பட்டதை வரவேற்கும் நோக்கில் இன்றுமுதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நவோதயா வாரம் இடம் பெறும். (91)

## வலி - வடக்கு பிரதேசசபை உப அலுவலகம் இடமாற்றம்

வலி.வடக்கு பிரதேசசபைக்குட்பட்ட மல்லாகம் உப அலுவலகம் சென்றமாதம் தொடக்கம் மல்லாகம் நீதிமன்ற வீதியிலுள்ள காங்கேசன்துறை உப அலுவலகம் முன்பாகவுள்ள, கட்டடத்தில் செயற்பட்டு வருகின்றது. முன்னர் காங்கேசன்துறை வீதியில் இயங்கிய இந்த அலுவலகம் கட்டட உரிமையாளர் கட்டடத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டதால் இடம்மாற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (101)

## வீதியோர கற்குவியல்களால் சிரமம்

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியிலிருந்து மந்திகை கண்ணகை அம்மன் கோவிலுக்குச் செல்லும் வீதியில், வீதி திருத்த வேலைக்காகப் பறிக்கப்பட்டிருக்கும் கற்குவியல்கள் வீதியில் பயணஞ்செய்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (14)

## காணிப்பதிவகத்தின் போட்டோ பிரதி இயந்திரம் பழுது

பருத்தித்துறை காணிப் பதிவகத்தில் உள்ள போட்டோ பிரதி இயந்திரம் பழுதடைந்துள்ளது. இதனால் பிறப்பு, இறப்பு, சான்றிதழ்கள் வழங்குவது தாமதமடைந்துள்ளது.

இதனை உடனடியாகத் திருத்தி அவசர தேவைகளுக்கு மக்கள் சமர்ப்பித்த சான்றிதழ்களை தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

## வீதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு - நாயன்மார்கட்டு-ராணிவீதி புனரமைக்கப்படவுள்ளது. புனரமைப்புக்கான ஆரம்பக்கட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாநகரசபையின் எல்லையினுள் அமைந்துள்ள இந்த வீதி பழுதடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இந்தவீதி மக்கள் பாவனை அதிகமுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (90)

## சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவு

(மானிப்பாய்)

கட்டுடை நவாலி மகா சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும், போசகர் தவசி தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் நடப்பாண்டுக்கான நிர்வாகத்தில் தலைவராக - மு.ரமேஸ், செயலாளராக மு.பரமானந்தகுமார், பொருளாளராக நா.விஜயசந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுடன் 9 நிர்வாக உறுப்பினர்களும தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (91)

## உள்ளக இடமாற்றம்

(மானிப்பாய்)

நெடுந்தீவு பிரதேசசபையில் கடமையாற்றிய சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி அதிகாரி லே.கந்தசாமி கடந்த முதலாம் திகதிமுதல் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு இடம்மாற்றப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பிரதேச சபையில் ஏற்கனவே கடமையாற்றிய சனசமூக அபிவிருத்தி அதிகாரி ம.ஞானவேல் ராஜா ஓய்வுபெற்றுச் செல்வதால், அவருடைய இடத்துக்கே யாழ் மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் க.இராசையாவினால் நியமிக்கப்பட்டுள்ளார். (100)

# போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர் நலன்காக்கும் திட்டத்தில் மாணவர்களிடையே நாடகப்போட்டி

யுனிசெவ் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்காக்கும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டப் பாசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டி - எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் யாழ் மாவட்டத்தின் 5 வலயங்களிலும் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. தென்மராட்சி, தீவகம், வடமராட்சி, யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய இடங்களில் நாடகப் போட்டிகள் நடைபெற்றன. வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 17 நாடகங்கள் மாவட்டமட்ட போட்டிகளில் கலந்துகொள்கின்றன. இந்தத் திட்டத்துடன் மாவட்டகல்வி திணைக்களமும் இணைந்து செயற்படவுள்ளது.

# கழிவுநீர் வாய்க்கால்கள் விரைவில் துப்புரவாக்கப்படும்

## மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட கழிவு நீர் வாய்க்கால்களை துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக யாழ்.மாநகர சபை ஆணையாளா க.குணராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், திருநகர்ப் பகுதிகளில் உள்ள கழிவுநீர் வாய்க்கால்கள் நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படாததால் அதில் தேங்கியுள்ள கழிவு நீரால் அந்தப்பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதோடு, சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இதுகுறித்து ஆணையாளரிடம் கேட்டபோதே அவா இவற்றை விரைவில் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

அத்துடன் சில இடங்களில் அகற்றப்படாமல் தேங்கிக் கிடக்கும் குப்பைகளையும், கழிவுப் பொருட்களையும் விரைவில் அகற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (55)

# வீதியோர மது விற்பனையால் அரியாலை மக்கள் அசௌகரியம்

(அரியாலை)

அரியாலை இராஜேஸ்வரி வீதியில் இரவுவேளை வீதியில் வைத்து மதுபானம் விற்கப்படுவதாகவும், இதனைப் பருகவருபவர்கள் அந்தவீதியில் பெருமளவில் கூடியிருப்பதால் அதனூடாகப் போக்குவரத்துச் செய்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

மது அருந்தவருவோர் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்கள், சண்டைகள் என்பவற்றில் ஈடுபடுவதால் அந்தப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன், பெண்கள் இரவுவேளை போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (55)

# மணற்காடு திறப்புவிழாவை கடற்தொழிலாளர் பகிஷ்கரிப்பு

(வடமராட்சி)

கடந்த சனிக்கிழமை மணற்காடு மீனவர் இளைப்பாற்று மண்டபத் திறபபு விழாவில் மணற்காட்டைச் சேர்ந்த எந்தவொரு கடற்தொழிலாளர்களோ, பொதுமக்களோ கலந்துகொள்ளாமல் பகிஷ்கரித்ததாகத் தெரிய வருகிறது.

இந்த மண்டபம் அரசாங்க அதிபர் செ.பத்மநாதனால் திறந்துவைக்கப்பட்டது. பருத்தித்துறை பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்டு திறப்பு விழா நடத்தப்பட்டது. ஆனால், தங்களது சொந்த ஊரில் இந்த நிகழ்வை நடத்தியபோதும், தங்களுக்கு எந்தவித அறிவித்தலோ அழைப்பிதழோ கொடுக்கவில்லை என இந்த ஊர் மக்கள் கவலை தெரிவித்தனர்.

அத்துடன் இதில் உத்தியோகத்தர்கள் சிலரே கலந்துகொண்டனர். ஆனால், 12 மணிக்கு நடைபெற்ற மணற்காடு - பொற்பதி வீதி திறப்பு விழாவில் சகல பொதுமக்களும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (14)



ஞானவீர சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி, பொது அறிவுப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
இரண்டாவது அகவையில்



பெயர் : அ.மேருஜன்
முகவரி : பண்டத்தரிப்பு

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

# உளவளத் துணையாளர்களை பயிற்றுவிப்பதற்குத் திட்டம்!

'சாந்திகம்' உளநலவள நிலையத்தில் உளவளத் துணையாளரைப் பயிற்றுவிக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்காக விரைவில் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி, அவர்கள் நேர்முகப்பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

அத்துடன், இந்த நிலையத்தில் ஆரம்பம் முதல் சமூக உளநலப் பயிற்றுனர்களுக்குப் பயிற்சி வங்கப்பட்டுவருகின்றது. 9 மாதங்களுக்கு பயிற்சிபெறும் இச் சமூக உளநலப் பயிற்றுனர்கள், பயிற்சி முடிந்தவுடன் சமூக மட்டத்தில் உளநலம் பாதிப்படைந்தவர்களை இனம்கண்டு அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவர். (55)

# மாகாணமட்டப் போட்டிகளில் பங்குபற்றுவோரின் விபரம்!

(மானிப்பாய்)

செப்ரெம்பர் 30 ஆம் திகதி மற்றும் ஒக்ரோபர் 1, 2, 3, ஆகிய திகதிகளில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள மாகாணமட்ட விளையாட்டுப்போட்டிகளில் மானிப்பாய் மெறோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவர்கள் எட்டுப்பேர் பங்குபற்றவுள்ளனர்.


800 மீற்றர் ஓட்டப்போட்டியில் சி.விமல்ராஜ், 400 மீற்றர், 800 மீற்றர் ஆகிய இருபோட்டிகளில் பா.டினோஜினி, 4x400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியல் சி.கலாதேவி, சி.கிருஷாந்தினி, ம.நிஷாந்தினி, இ.சிந்துஜா, பு.கோவர்த்தனி, பா.டினோஜினி ஆகியோர் பங்குபற்றவுள்ளதாக பாடசாலை அதிபர் அ.மு.அருணாசலம் தெரிவித்தார். (91)

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

'நிகொட்' அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு, துன்னாலை ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுமண்டபம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

கலாசாரம்



மார்கழி மழை எண்டால் மல்லர்களும் கொடுகிக் கொண்டிருப்பார்களாம். மாரிமழை இருண்டு கறுத்த மேகத்தில் இருந்து படையெடுத்துக் கொண்டிருந்தது. ஆரோ ஒருவர் ஏதோ ஒன்றை நினைச்சு

எந்தப் பிரச்சினையுமே இல்லை. சாந்தினிக்கு நாளைய நாள். அதனை நினைக்கும்போது அவளது மனம் புல்லரித்துக் கொண்டது. நாளைக்கு அதனை அவளால் நம்பவே முடியாதிருந்தது.

"இதுவரையான எங்கடை காதல்பேச்சுக்கு நாளைக்குத்தான் கைச்சாத்து." என்ற எண்ணம் தோன்றியபோது இதமான சுகம் அவளைக் குதூகலிக்க வைத்தது. முகத்தில் ஆனந்தம், வயது இருபத்தைந்து இருக்கும். என்ன சொன்னாலும் எத்தனை அழகு, கோடிமலர் கொட்டிய அழகு. அவள் யன்னல்களுக்கு வெளிநாட்டுக் குளோத் ஒன்றை வெட்டிப் போட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு அந்த நாளில் அகிலன் கூறும் வார்த்தைகள் நினைவுக்கு வந்தது.

தன்னை மறந்து யன்னல்களுக்குச் சீலை போட்டவளுக்குத் தன் நினைவு வந்தது. நிலைக் கண்ணாடியில் தன்னைப் பார்த்தவளுக்கு "பிரமன் உன்னைப் படைக்க என்ன தவம் செய்திருப்பான்." எண்டவர் எல்லோ. அவளை நாணம் ஆட்கொண்டது.

பிரகாசித்தது.

"பிள்ளை, என்னணை சாப்பிட வரயில்லையே, அம்மா விடிய நேரத்தோடை எல்லோ எழுப்ப வேணும் கண்டியோ..."

"என்னம்மா எனக்குப் பசிக்கேல்லையே..." மூன்று வயதுக் குழந்தை மருந்து குடிக்கமாட்டன் என்பது போல, சாந்தினி சிணுங்கினாள். ஆஸ்திக்கும், ஆசைக்கும் ஒரு பெண்ணும், ஒரு ஆணும் அதிலும் கடைசி சாந்தி. அது இன்னும் செலலமாய்ப் போய்விட்டது. ஆனால், சாந்திக்கு இதெல்லாம் விளங்காதே. அவள் என்ன செய்வது. அவளின் ஆனந்தம், ஆர்ப்பரிப்பு, பூரிப்பு அவளுக்குப் பசியையும் காட்டவில்லை. பசிக்கு இடம்போட்டுக் கொடுக்கவும் இல்லை. தான் படிச்ச காலம் தொடக்கம் நேசித்தவனை, மனதிலை வரிச்சவனை, ஒரு பண்பானவனை, சிறந்த உழைப்பாளியை, பாசத்தின் இருப்பிடத்தை நாளைக்கு சட்டபூர்வமாக் காணப் போறன் எண்டா எந்தப் பெண்ணுக்குத்தான் நித்திரைவரும், பசிவரும். ஆனாலும், தமையனுக்குத்தான் தங்கைமீது அக்கறை அதிகமாச்சே. அவன் தமையன் மட்டுமல்ல. அவன்தான் தற்பொழுது தந்தையும்கூட.

வீட்டின் பின்புறத்தே நின்ற வேப்பமரத்தில் இருந்து தனது இறக்கைகளை அடித்த சேவல் "கொக்கறக்கோ... கோ..." எனக் கூவிய சத்தம்கேட்டுச் சாந்தினி நினைவுகளில் இருந்து அறுபட்டுக் கொண்டாள். நேரத்தைப் பார்க்கின்றாள். மணிக்கம்பி நாலைக் காட்டுகின்றது.

"நேரம் போச்சுதே. அவர் எல்லோ சொல்லுறவர் நாலுமணிக்கு முன்னம் எப்பவுமே எழும்பவேணும் எண்டு. இனி எல்லாம் இப்படிக் கிடக்கவே ஏலாதே. இந்தப் படுக்கையளெல்லாமே இன்னும் கொஞ்ச நாளைக்குத்தானே." அவள் மனம் தனக்குத்தானே கட்டளையிட்டுக் கொண்டது.

தோய்ஞ்சு, குளிச்சு ஆனந்தமாக வந்து நின்றாள் சாந்தி. அவளுக்கு நேரம் போவதாகவே தெரியவில்லை. அவர் எப்பிடியும் அவையள எல்லோருமா பதினொரு மணிக்குத்தான் வருவினம் எண்டவை அவையளோடதான் றெயிஸ்ராரும் வருவாராம்.

சம்பூ வாசனை மூக்கைத் துளைத்தது. அவளுக்கு ஏதோ ஒன்று பிரகாசமாய்த் தெரிஞ்சது. "சாந்தி நாலுமணிக்கு எழும்பி நல்ல வடிவாத் தோஞ்சிட்டுத் தலையை

யாமலே அவளது வாய் "இன்னும் ஒரு கிழமை" என்றது. ஏனப்படி அவளது வாய் உன்னியது. அது நினைத்தால் கற்கண்டாயும், நிதானித்தால் பாகற்காய் போலவும் இருந்தது. கொடியிடை, அற்புதமான அங்க அசைவு, நேர்த்தியான புடவை மடிப்பு, நிதானமான பார்வை. இதுதான் அகிலனை அதட்டியதோ அன்று.

சாந்திக்கு நேரம் அசைவதாகக் கூடத் தெரியவில்லை. அடிக்கடி மணிக்கூட்டைப் பார்க்கிறாள். அது எப்பொழுது பதினொன்றைக் காட்டப் போகிறது என்று. ஆனால், அதுதான் என்ன செய்யமுடியும். அது ஆறைக் காட்டுகிறது.

படலையில் ஒரு மோட்டார்



சிறுகதை

சைககிளின் சத்தம் அவளை உலுப்பியது. அந்தச் சத்தத்துக்குச் சொந்தக்காரன் இந்த நேரத்திலை வரக் கூடாதே என்றவள் ஓடிச்சென்று பார்க்கிறாள்.

"எடை,' அது எங்கடை மரியதாசண்ணையின்ரை பெடியன் எல்லோ... நான் சத்தத்திலை..." அவளுடைய மனம் அவளுக்கே பதில் கூறிக்கொண்டது.

"அண்ணை ஆரோ தேடுகினம்... உன்னை"

"ஆரப்பு... ஆ... என்ன விசயம். அவை எத்தனை மணிக்கு வருவினம்."

இத்தனைக்குள்ளும் சாந்தி சிட்டாய்ப் பறந்துபோய்த் தன் அறைக்குள் இருந்தாள். "வரப்போகினம். அதுதான்போல ஆள் விட்டிருக்கினம்..." இது அவளின் நினைப்பு.

"அகிலண்ணையின்ரை தம்பி... சொல்லச் சொன்னவர்... அவசரமா ஒண்டையும் ஆயத்தப்படுத்த வேண்டாமாம். தான் எதுக்கும் நேரை வாறாராம்..."

"என்ன... என்ன நடந்தது என்ரை மச்சானுக்கு... அவன் என்னத்தைச் சொன்னாலும் என்ரை அம்மாவின்ரை தம்பியின்ரை பெடியன் தானே. அவனுக்கு அப்பிடி என்ன நடந்திருக்கும்..." அவன் பலபடி சிந்தித்தான். ஆனாலும், அப்பிடி ஒண்டும் நடந்துவிடக்கூடாது..." அவன் இதயம் ஏங்கிக்கொண்டிருந்தது. எதுக்கும் நான் இப்ப ஒண்டும் சொல்லாமல் இருப்பம்.

"என்னவாம்... அண்ணாச்சி... வருகினமாமோ..." எங்கே தமையனது பதிலை சாந்தி எதிர்பார்த்தாள். "எப்படி... நான் சொன்னதுதான் சரி. அவையள் நேரம் எண்டா நேரம். உங்களை மாதிரியே அவையள்..." அவள் பித்துப்பிடித்தவள் போலப் பேசினாள்.

"ஆனா... ஏன் அவற்றை தம்பிக்காரன் ராஜன் வந்திருக்கலாம்தானே எதுக்காக... ஆரையும் அனுப்பிக் கிடக்கு" இதை எண்ணியபோதே அவள் மனது சற்று எட்டி விசாரித்தது.

"இல்லைப்பிள்ளை, அவையள் கொஞ்சம் செண்டுவருவினமாம்" அந்தக் கூற்றுமட்டும் சாந்தினிக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது.

"ஏன்... என்ன பிரச்சினை அண்ணாச்சி..."

"இல்லைப்பிள்ளை, அந்த எழுதுறவருக்கு நேரமில்லைப்போல" அவன் இதைவிட இப்பொழுது எதைத்தான் சாட்டமுடியும். ஒரு ஓட்டோவின் உறுமல் கேட்டு எட்டிப் பார்த்தாள் சாந்தி.

"சாந்தி அக்கா... சாந்தி அக்கா..."

"ஆரது..."

"அது... உ... நான் ராஜன்"

"உள்ளுக்குள்ளை வாங்கோவன்..."

"இல்லை... உங்கடை அண்ணாவை வரச்சொல்லுங்கோ ஒருக்கா..."


"அண்ணா உங்களை ராஜன் வரட்டாம்..."

"ஏன் இப்படி வெளியில நிண்டு கொண்டு ராஜன் அண்ணாவைக் கூப்பிடுகிறான். என்ன பிரச்சினை நடந்தது... ஏதோ பிரச்சினை உதுக்கை இருக்கு... அவன் ஆர் இனி எனக்கு... நான் இனிமேல் அவனுக்கு ஆர்... அண்ணியெல்லோ... இதுவரை நாளாய் என்னோட எப்பிடி எல்லாம் கதைக்கிறவன்... ஏன் இண்டைக்கு அதுகும் உள்ளுக்கு வரச்சொல்ல மாட்

# அவள் மரணித்துப் போகவில்லை

கே.ஏதீஸ்தாசன்

நினைச்சு விம்மி அழுகிறது போலை இடி இடிக்க மின்னி மின்னி மழை பொழிந்துகொண்டிருந்தது. அதனால் வானம் மட்டுமல்ல தரையும் இருண்டு எங்கும் இருள்மயம் குடிகொண்டிருந்தது. இத்தனைக்குள்ளும்



சாந்தினிக்கு மட்டும் குளிரும் இல்லை, நடுக்கமும் இல்லை. அவளின் உடலில் உண்டான ஒருவித உற்சாகம் சூட்டைக் கொடுத்துக்கொண்டிருந்தது. "என்ன சொன்னாலும் நான் அதிஷ்டசாலி எல்லோ..." சாந்தினியின் மனம் தனக்குத்தானே சொல்லிக்கொண்டது.

"என்ரை அண்ணையையும், அம்மாவையும் போல எல்லாருக்கும் கிடைக்காது..."

சாந்தினி இப்பிடிப் பெருமைப்படக் காரணமில்லாமல் இல்லை. எல்லா மனிதர்களது வாழ்க்கையிலையும் எதிர்பார்ப்புக்கள் நிறையவே இருக்கிறது. ஆனால், அவை நிறைவேறுவதில்லை. இன்னும் பிள்ளையின்ரை எதிர்பார்ப்புக்களைப் பெற்றார் சரியாய் நிறைவேற்றினதும் இல்லை. இதுக்குப் பெற்றார் பிள்ளையின்ரை பிரச்சினைகளைச் சரியாய்ப் புரிஞ்சு கொள்ளாமல் விடுவதே பெரிய தவறாப் போகுது. ஆனால், இந்தவகையில் சாந்தினிக்கு

அவளை அவன் கிள்ளுவதாய் அவள் உணர்ந்தாள்.

"என்னடி அம்மாச்சி இன்னும் உனக்கு நித்திரையே வரவில்லையோடி. நேரமெல்லோ பத்தாகுதடியம்மா..."

அப்பொழுதுதான் சாந்தினி இத்தலதுக்கு வந்தாள். ஆனாலும், இன்னும் ஒரு

வேலை கிடக்கு. அவருக்குக் கோலம் எண்டாக் கொள்ளை பிரியமே. அதையும் போட்டிட்டனெண்டா நான் படுக்கலாம் என்றபோது அவளுக்கு அகிலன் அவளருகே கிட்ட நெருங்கி அவள் கையைப் பிடித்துக்கூறிய காதல் மொழிகள் காதில் கேட்டன.

"சாந்தி... என்னைப் பொறுத்தவரை எனக்குக் காதல் பிடிக்கும். ஆனா... அது கற்பாக மலர்வதைப் பிடிக்குமேதவிர அது ஆடுவது, ஓடுவது பிடிக்காது... நாங்கள் எங்கடை பண்பாட்டுப்படி நடக்கப்பழக வேணும்..." என்ற மாத்திரத்தில் அவள் மனத்தில் கேட்ட அகிலனது குரலுக்கு, இதயராகம் பேசியது. இதயங்களைத் தட்டி எழுப்பும் இதயராகம். ஆர்ப்பரிக்கும் இதயத்தோடு சேர்ந்தால் எப்படியிருக்கும். அந்த இதயராகம் அவள் காதுகளில் மங்கலாய் விழுந்தது. "எனக்காகத்தான் இண்டைக்கு இதயராகம் போல" எனக்கு மஞ்சள் நாளைக்கு மங்கலாய்க் குங்குமத்தைத் தாங்கி வரும் என அவள் மனம் மகிழ்ச்சிப் பிரவாகத்தால்

"பிள்ளை. என்னணை சாப்பிடனம்மா. போய் நாளைக்கு எழுதி முடிச்சுத்தானே சாப்பாடு தருவினம். அவளவுக்கும்..." நிறுத்தினான் தமையன்.

"பசிச்சா அண்ணாச்சி... நா... ஏ... சாப்பிடாம விடுறன்... எனக்குப் பசி... இல்லை... ஆனா... அம்மா விடுறா... இல்லையே" என்றாள். அவனுக்குத்தான் அதன் அர்த்தம் புரிந்துகொண்டதோ என்னவோ. ஆனால், தாயோ சோத்தைப்

பிசைந்து தீத்தினாள். அவளுக்கு எதுதான் செய்தும் என்ன. காதல் வைரஸ்சின் தாக்கம் இப்பொழுதே பிடிச்சிட்டுது. இனி சுத்தப்படுத்தினால்தான் எல்லாம் சரி வரும்.

சாந்தினி... கட்டிலில் புரண்டு புரண்டு படுக்கிறாள். எனினும், அவளுக்கு எங்கே நித்திரை வந்தது. பழைய நினைவுகள் பாடம், பாடமாய் சுற்றிச் சுழன்று சுவீகரித்துக் கொண்டிருந்தது அவளை.

"நாளைக்கு அவர் வரேக்கை நான்... சொல்ல எவ்வளவு புதினம் இருக்கும்.

"சாந்தி நான் உன்னைக் கட்டாமல் செத்திட்டா நீ ஆரைக் கட்டுவே...?" அவன் தன்னைக் குறும்புக்கு இழுப்பதும், கண்கலங்க அழவைப்பதும், பின்பு சிரிக்க வைப்பதும், சிந்திக்க வைப்பதும் இனி நிரந்தரமாகப் போகிறது என்றபோது, அவள் மனம் உணர்ச்சியின் விளிம்பை அடிக்கடி தொடுவதாய் அவள் உணர்ந்தாள்.

உலர்த்தி அதற்குச் சாம்பிராணிப் புகையைப் போட்டுக் காயவிட்டுக் கட்டிக்கொண்டு உன்ரை குலதெய்வத்தைக் கும்பிட்டிட்டு என்னை வந்து எழுப்பவேணும் கண்டியோ, எப்பவும் நான் உன்னிலை தான் முழிக்கவேணும். அதுக்குப் பிறகு தான் நான் வேலைக்குப் போக வேணும். அதுதான் மரபு கண்டியோ"

அவளுக்கு அகிலன் கூறிய வார்த்தைகள் மீண்டும் காதில் ஒலித்தன. அவள் தலைமுடியை உலர்த்தி அதற்குச் சாம்பிராணிப் புகையைப் போட்டாள். பின் கடவுளை வணங்கிக் காரியம் தொடங்கினாள்.

"அவருக்குப் பயத்தம் பணியாரம் எண்டாக் கொள்ளைப் பிரியம் எண்டிறவர்... அதை நல்லதாய் எடுத்து வைப்பம்" என்றபடி அவருக்கு விருப்பமானவைகளை இப்பொழுதே செய்யத் தொடங்கிவிட்டாள் சாந்தினி. இதுதான் காதல் திருமணத்தில் நடக்கிற அற்புதம். புரிந்துகொண்ட உறவோடு புது வாழ்வு. ஆனால், பேச்சுத் திருமணம் என்றால் அது பேசிப் புரியவைச்ச பிறகுதான் புது வாழ்வு. இங்கு சாந்தியின் வாழ்விலே இரண்டு இளையோடுகிறது. அப்படி என்றால் எப்படி இருக்கும்.

"சாந்தி... சாந்தி... வெளிக்கிடம்மா கெதியாய் எதுக்கும்... பேந்து அவசரப்படாதை" இது அண்ணனின் அன்புக் கட்டளை. அவனுக்குத்தான் சாந்தியின் நிலை இன்னும் சரியாய்த் தெரியாதே.

"அவருக்கு சுடிதார் பிடியாதே... அவருக்கு நகையளை அள்ளிப் போடுறதும், காதிலை ஆயிரம் இடத்தை தோடு குத்துறதும் பிடிக்காதே" என்றபடி, ஒரு தேவதை வந்தாள் என்று சொல்லும்படி கணக்கான நகையும், பண்பாடான உடையும், பக்குவமான நடையும், முகத்தில் புன்னகையும் அவளையே பிரமிக்க வைத்தது. கண்ணாடிமுன் சென்ற அவளுக்கு அவளை அறி

# நூல் அகம்

நூலின் பெயர்:- மாரீசனின் போர்க்காலக் கவிதைகள்

ஆசிரியர்:- மாரீசன் (சவிரிப்பிள்ளை)

வெளியீடு:- தனேந்திரன் வெளியீட்டகம், ஊற்றுப்புலம், கிளிநொச்சி.

விலை :- 200/=

இலக்கியங்கள் என்பவை சராசரி மனித மனங்களை அதாவது சமூகத்துடன் ஒட்டு மொத்த மனப்பான்மையை - உணர்வுகளை- அனுபவங்களைப் பிரதிபலிப்பவையாக அமையும் பட்சத்தில் அவை எந்தவித விளம்பரச் செலவுமின்றி மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுவிடுகின்றன. இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் "நான் எதையும் எழுதுவேன். எப்படியும் எழுதுவேன். நீ வாசிக்க வேண்டியதுதான்" என்னும் இலக்கிய எதேச்சாதிகாரப் போக்கு இன்றைய ஈழத்து எழுத்துலகில் வளர்ந்துவருவதும், வாசிப்புப் பழக்கம் நம் மத்தியில் அருகி வருவதற்கு ஒருகாரணமாகும். தரமான பாகுபொருளைச் சுவைத்தும்ப் எழுதுவதன் மூலம் வாசகர்களைத் தம் ஆக்கங்களில் ஈடுபாடுகொள்ள வைக்கும் ஈழத்து எழுத்தாளர்களுள் ஒருவராக, இந்தக் கவிதைத் தொகுதி மூலம் தம்மை இனங்காட்டிக் கொள்கிறார் கவிஞர் மாரீசன். அதாவது அடி மனங்களிலாவது தேச விடுதலையுணர்வு இல்லாத தமிழர்கள் இங்கு இல்லை. இந்தத் தேசிய உணர்வைப் பிரதிபலிப்பவையாகப் பெரும்பாலான கவிதைகள் இந்தத் தொகுதியில் விளங்குவதால், வேறுபட்ட அளவுகளில் என்றாலும், நிச்சயம் தமிழ் வாசகர்களை இந்தக் கவிதைகள் படிக்கத்தூண்டும் என்பதில் ஐயமில்லை.



மரபுக் கவிதைகளாக - ஓசை நயமிக்கவையாக அமைந்துள்ளதோடு, இந்தக் கவிதைகள் எளிய வழக்குச் சொற்களில் ஆனால், கொசசை கலவாமலே நடப்பியல் பாண்மை உட்பொதிந்தவையாக அமைந்திருப்பது இன்னொரு சிறப்பாகும்.

இந்தத் தொகுதிக்கு முதலில் சூட்டப்பட்டிருந்த பெயர் - கவிஞர் மாரீசன் கவிதைகள் என்பதே என்பதும், பின்னர் அதற்கு "போர்க்கால" என்ற தொடர் நூற்பெயரில் இடைச்செருகல் செய்யப்பட்டிருக்கிறது என்பதும் நூலின் உட்பிரிவுத் தலையங்கங்கள் அனைத்தும் மாரீசன் கவிதைகள் என்று அச்சிடப்பட்டிருப்பதிலிருந்து புலனாகிறது.

இன்றைய காலகட்டத்தில் ஈழத்தமிழன் ஒவ்வொருவனுக்கும் கட்டாயமாக இருக்க வேண்டிய இனக்காப்பு வேலியாயமையும் ஈழத்தேசிய உணர்வையே உயிர் நாடியாகக் கொண்ட இந்தப் பாடல்களின் முழுமையான வீச்சை இந்த நூலைப் பதிப்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்கள் கருச்செய்வதில் பெரும் வெற்றி கண்டுள்ளார்கள் என்றே கூறவேண்டும். அதாவது, 140 இற்கும் மேலாக இந்த நூலில் இடம்பெறுவிக்கப்பட்டிருக்கும் அச்சுப் பிழைகள் பாடல்களின் தெளிவை - உயிரோட்டத்தைக் குறைத்தே உள்ளன.

மேலும் இந்த நூல் 242 பக்கங்கள் கொண்டு, இந்த நூல் கவர்ச்சியான அட்டைப் படம், உறுதியான கவிக்கோ - தடித்த மட்டைக் கட்டமைப்புக் கொண்டதாக ஆக்கப்பட்டுள்ளது. இந்த நூல் வெளிநாடுகளுக்குப் பெருமளவில் எடுத்துச்சென்று புலம்பெயர் தமிழர்கள் கைகளுக்கு எட்டச்செய்யப்படும் பலம்கொண்ட ஒரு தரப்பின் பின்புலம் கொண்டதாயுள்ளமை அறியப்படுகிறது. இந்தப் புறக்கவர்ச்சியில் செலுத்தப்பட்ட கவனம் உட்கவர்ச்சி சிதைக்கப்படாமற் காக்கப்படுவதிலும் செலுத்தப்பட்டிருந்தால் அது தமிழ் உலகம் ஊனமில்லாத முழுமையான ஒரு படைப்பை நுகர்ந்தின்புற வாய்ப்பளித்திருக்கும் என்பது நிச்சயம்.

-பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்-

டன் எண்டுறான். அவள் மனதில் நிறைய சிந்தனைகள் நிழலாடின.

ஆனால், அப்பிடிப்பட்டவன் இல்லையே என்ரை அகிலன்."

"அம்மா..."

"என்னண்ணை..."

"என்னடா தம்பி"

"இஞ்சை ஓடி வாங்கோணை அம்மா ஐயோ..." ஐயோ, நான் எப்பிடிச் சொல்லுவன் வாயாலை..." வார்த்தைகள் வாய்வழி வரவில்லையே தவிர காயாத காரணங்களைக் காட்டியபடி கண்ணீர் படையெடுத்துக் கொண்டிருந்தது.

மல்ரிபரல் பட்டுச் சிதைந்துபோன மரம் போல வட்டவடிவான அவன் முகம் ஏனோ சிவத்துக் கவலையில் தொங்கிக் கொண்டிருந்தது.

அந்த முகம் அவன் பிரச்சினையைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது. இத்தனைக்குள்ளும் சாந்தினிக்கும், தாய்க்கும் என்ன நடந்தது என்று தெரியாது. ஆனாலும், தமையனது சோகத்தால் சோபை இழந்தனர். சோர்வுறக் கதறினர். என்ன நடந்தது என்று பலமுறை கேட்டனர்.

"என்ரை அத்தானை... இஞ்சை கொண்டு வாறதோ இல்லையோ எண்டு கேக்கத்தான் ராஜன் வந்திருக்கு" என அவன் முடிவுக்கு முன் என்ரை ஐயோ என்ற ஒலி வானைப் பிளந்தது.

"அவையள் ராத்திரித் தொழிலுக்குப் போனவையாம். நேவி வெட்டிப் போட்டுதாம்"

"என்னடா தம்பி... ஐயோ... தீர விசாரிச்சனிங்களே. இப்ப யுத்தநிறுத்த ஒப்பந்த காலமெல்லோ." இது சாந்தினியின் தாயின் எதிர்பார்ப்பு அவள் கண்ணீர் கலந்தபடி கேட்டாள்.

"நானும், அண்ணனும், அத்தானும்தான் ராத்திரி போனனாங்கள்... தூரத்திலை நேவி வரக் கண்டிட்டு அண்ணன் அறக்கொட்டியான் வலையை இழுத்தவன், லாம்பை உயர்த்திப் பிடிக்கச் சொல்ல, அத்தான் உயர்த்திப் பிடிச்சவர். அப்பவும் நேவியின்ரை கண்போட் நேரா எங்கடை போட்டுக்குமேல ஏறீட்டுது. அதிலை அத்தானும், அண்ணனும் மாட்டுப் பட்டிட்டினம்... நான் போட் கிட்டவரவே கடலுக்கை குதிச்சிட்டன். அதால நான் அண்ணன்ரை... என்ர அண்ணன்ரை கையை மட்டும்தான் எடுக்க முடிஞ்சுது..." இது கேட்டு ஐஸ்கிறீமாய் உருகிய அனைவருள்ளும் சாந்தி இடி விழுந்த மரமாகித் துடிப்புக்கள், உணர்ச்சிகள், வார்த்தைப் பிரயோகங்கள் எதுவுமே இல்லாதவளாய் நிலத்தில் விழுந்தாள். ஆனால், அவளிடம் இருந்து கண்ணீர் மட்டும் படையெடுப்பதை நிறுத்திக் கொள்ளவேயில்லை.

"என்னடி பிள்ளை. இதுக்கெல்லாம் கவலைப்படுகிறதே... இது எங்கடை சனத்துக்குப் புதிசே... அங்கை பக்கத்து வீட்டுப் பவளத்தோடை புரியன் கட்டி ஐஞ்சாம் நாள் நாள்வேலைக்குப் போகப் போட்டிலை உடுப்பை மட்டும் போட்டிட்டு ஆளை வெட்டிப் போட்டாங்கள். நீ... என்னண்டாக் கட்டாமலே..."

இது மரியநாயகம் அண்ணையின்ரை மனிசி கூறிய இரங்கல் உரை. "அது சரி கட்டின கணவன்மாரைப் புதிசிலையே சரிக்கட்டினாத்தானே கரைவழிய காவல் இருக்கிற ஆக்களுக்கு வசதியாயிருக்கும்." மரியநாயகம் அண்ணை எங்கடை ஜனநாயகத்தின்ரை திருவிளையாடலைச் சொன்னார்.

ஆனால், இத்தனையும் சாந்தினிக்குத்தான் கேட்காதே.

அவள் மரணித்துப் போகவில்லை. ஆனால்...

✷


# நெருக்கமான சூழல்

ஏதோ ஒரு மாதிரி இருக்கின்றது. எங்கேயோ சென்று திரும்பியது போன்று வெறுமையாயகவே இருக்கின்றது உடல். ஆறுதல் இல்லாமலும் அமைதி அடைந்ததுபோல மனம் தேங்கிக்கிடக்கின்றது.

சூரிய வெளிச்சத்தில் சுடவில்லை. நடு வெயிலில் பாதம் நடக்கின்றது. ஒரு எல்லைவரைதான் என்னால் போகமுடியும். அதற்குப் பிறகு மேலே பார்க்கின்றேன். பரந்தவெளி, அழகான வானம் நீலம் கொட்டிக்கிடக்கின்றது. கீழே பார்க்கின்றேன் சுட்டுக்கொண்டிருக்கின்றது தரை.

எவ்வளவு தூரம் நடக்கவேண்டும் தெரியாது. என்னுடைய தேவைகள் இருக்கும் இடம்வரை நான் நடக்கின்றேன். பிறர் என்னைப் பார்க்காதவிடத்து, வழி தவறியும் சென்றிருக்கின்றேன். நினைத்தது கண்டிப்பாக என் மனதில் இருந்து, மறந்து வெகுநாளாக இருக்கும். நடந்தது என்று பார்த்தால் ஒரு நாளும் என் மனம் நினைத்தது என்று திரும்பிப் பார்த்ததில்லை.

நெருக்கமான சூழல் இது. அவசரமான காலம் இயந்திரமான வாழ்வு, தேடி எடுக்கின்றோம் என்று சொல்லிக் கொண்டு தொலைத்துச் செல்வது எதுவென்று யாருக்கும் தெரியவில்லை. ஓடுகின்றோம், தேவைகள் மிதமிஞ்சி மீதமாகவுள்ள போதும் தேடுகின்றோம். நீண்ட வெளிக்குப் பிறகு ஆறுதல் கிடைக்குமா என்று பார்க்கையில், எமது பார்வைகள் குருடான நிறையச் சம்பவங்கள் எம்மைக் குறைவாக அடையாளப்படுத்திச் செல்கின்றது.



அழகான ஒரு விடயம் எம் பார்வைகள் பிச்சைக்காரன், உதிர்ந்துபோன கிராமம், பட்டமரம், வற்றிய ஆற்றுமணல், கானல் நீர், சருகான இலைகள், இயற்கை வாழ்வியல் அடைந்த திருப்திதான் இந்த அடையாளங்கள்.

கரை கடந்த நகர்வு மட்டும் எத்தனை இடை வெளிகளை நிரப்பாமல் சென்றிருக்கின்றது. திட்டு திட்டாய் மேடு, பள்ளம், மணலின் ஒதுக்கங்கள். எம்மைப் பிரிவுபடுத்தும் மாற்றம் ஒவ்வொருவரிடமும் கொட்டிக்கிடக்கிறது. அள்ளிக்கொண்டு செல்கின்றது குறையாமல்.

இலகுவாக எதுவும் இல்லை. தயார்படுத்திக் கொண்டவை தவிர எமக்கு மற்றவையெல்லாம் பாரமானவை. சிலிர்த்த சிறகில் குளத்தின் கலங்களிலும் காகம் நனைந்த விதம் தெரியும். இரண்டு பக்கம் ஒரு விளைவில் மனம்.

தவிர்க்கும் மனம் ஒன்று மேயில்லாத வேளைகளில் மட்டும் தெளிவுபட முடியாமல் புதைந்து போய் மீட்கப்பட முடியாமல், புரிந்துணர்வையும் தேடாமல் மூழ்கிப்போய் இருக்கிறது ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவிதமாக.

ஆக்கப்பட்ட வடிவமாக, அலங்காரப் பொருளாக, பிறர் கண்ணுக்கு மட்டும் குளிர்மையானபோதும் கூட, யாரும் நினைத்ததில்லை. எம்மை நாமே அங்கவீனப் படுத்துகின்றோம். என்று நினைக்கையில் பழைய மரபு தொண்மை வட்டத்திற்குள் சூழலவும் தெரியாமல், வெளியே வரவும் தெரியாமல் தவிர்க்கின்றதாகத் தென்படுகின்றது.

கடலில் படகு நிலையாக நிற்கமுடியவில்லை. நங்கூரத்தினாலும் வலுவாகப் பிடிக்க முடியவில்லை. ஓடும்போது மட்டும், இயங்கிக் கொண்டுபோகும் திசையில் எந்த வித மாற்றமும் இல்லாமல் பயணிக்கிறது. பயணப்பாதையில் எல்லோருக்கும் இடமுண்டு. ஆனால், ஒவ்வொருவரும் அதில் நடக்கவில்லை. ஓடவுமில்லை. மறைகின்றார்கள். இதற்குள் எல்லோருமே எதுவுமே எடுத்ததில்லை. ஆனால் போய் வருகின்றார்கள். பாதை மட்டும் அப்படியே இருக்கின்றது.

நாட்குறிப்பேட்டில் நிறைய எழுதினேன். வெறுமையாக அந்தப் பக்கங்களுக்கு மட்டும் முகமில்லை - தாடிவளர்த்து, கரிய நிறத்தில் பயப்புடுத்திக் கொண்டே சென்றது. அதனால் யாரும் பார்த்ததில்லை. ஒரு மூலையில் தூசு படிந்து கிடந்தது எமது இருப்பிடமாக. உள்ளே யாரும் போகமுடியாத அளவில் சிதறிய துண்டங்கள் பகுதி பகுதியாகச் சிறியது பெரியதாக நீக்கப்படும்வரை பதிவுகள் ஆகும். இதுதான் என்னுடைய அறை. இங்கே தூங்காத இரவுகள், எரியாதசிட்டி விளக்குகள், அன்றைய நாள் சாப்பிட்ட கறை படிந்த தட்டு அனைத்தும் சோகங்களை மட்டும் தூவி இருக்கின்றது.

முள்ளுக்கம்பிக்கு மட்டும் அடைப்பதற்கு இடமில்லை. என்ன தீங்கு செய்தது. ஒவ்வொரு நீர் நிலைகள் அருகிலேயும் வாடிக்கிடக்கின்றது. உனக்காகப் பாதுகாப்பு அறுநது விட முயற்சிக்கின்றதால் முள்ளுக்கம்பியும் உன்னோடு சேர்ந்து இறந்து விடுகிறது.

வேர், குளிர் காயும் நிலம் இது. இங்கே வாழவும் முடியாது, சாகவும், முடியாது. ஆனால், வாழ்வைத் தக்கவைத்துக் கொள்கின்றபோது மட்டும் உந்துதல் நம்பிக்கை முயற்சி எம்மில் ஏற்படுகின்றது. இதற்கிடையில் படபடப்பும், மூச்சுத் திணறலும் கூடுதலான நம்பிக்கை என்னில் - வரலாற்றில் விரியும் முகங்கொண்டு, பக்கம் பக்கமாக புறநானூறு படைத்து மீதமில்லாமல் நிரம்பி வழியும் வாளின் கூரின் முனையில் படுத்துறங்கி, விழிப்புத்தேடி இருளைத் தொலைத்துவிடியும் ஒவ்வொருநாள் அதிகாலையும் சூரியன் கிழக்கில் உதிக்கும் நிலை சிறப்புடையது.

கொடிபடர்ந்து மேவும்போது, வேரினை அறுத்த கொடூரம் எம் மண்ணில் நிகழ்ந்த அன்றைய நாள் விமானக்குண்டோடு இடம் பெயர்ந்து ஓடியபோதுதான் மாறியது. எம் உறவுகள் அறுபட்டு, எமது சொத்துக்கள் அழிக்கப்பட்டு, மீள முடியாமல் போனது நிரந்தரமல்ல.

- செல்வா -

# காகக்கூடு....!

என் வீட்டுக் கானிதனில்
இருந்ததோர் காகக் கூடு - அதில்
காகமொன்று இறந்ததனால்
கத்தினதே காகமெல்லாம் - அதனால்
என் காணியெங்கும் காக ஓலம்
எங்கிருந்தோ வந்ததே காகமெல்லாம்
காணியெங்கும் கரைந்து நின்றதே
கண்ணிமை மூடாப் பார்த்திருந்த -எனக்கு
கண்ணீர்த் துளிகள் கண்களிலே...
காகம் இறந்ததனால் வந்ததன்று
கண்ணீர்த்துளிகள்
காணியெல்லாம் சூழ்ந்து கரைவதால்
கண்ணீர் வந்ததில்லை
காக பண பேதம் பார்த்து
பாச வேசமது காட்டி
சாவீட்டிற்கு சூழும் சந்தர்ப்பவாத
சமுதாயங்கண்டே கவலை கொண்டேன்...!

பொன்.சுகந்தன்

# மௌனமாகவே

நீண்ட நேரமாக இருந்த
நிசப்தத்தைக் கலைத்தபடி
திறந்து வைத்த யன்னலூடாக
ஓடி வந்த காற்று...
விரித்து வைத்த புத்தகத்தின்
பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருக்கிறது.
மாமரத்திலிருந்து
காய்ந்து விழுந்த சருகுகள்
யாரின் காலடியும் படாமல் மௌனித்திருக்க,
எங்கிருந்தோ வந்த
ஒரு தொகைக் காற்று
ஓடி வரும் ஒரு குட்டிச் சிறுவனைப் போல்,
எல்லாவற்றையும் அள்ளிச் செல்கிறது.
குசினி யன்னற் கம்பியூடாக
உள் நுளைந்த
சின்னஞ் சிறிய அணிற்பிள்ளை ஒன்று,
சிதறுண்டு மிச்சமாகிருந்த
சோற்றுப் பருக்கைகளுக்காக
தனது இரண்டு கால்களை ஊன்றி
எட்டிப் பார்த்தபடி
வருவதும் ... போவதுமாய்...
வேலியோரப் பூவரசில் இருந்து
விக்கல் எடுத்தாற் போல்,
அடிக்கடி கரைந்து கொண்டு
எப்படியும் இந்த நிசப்தத்தை
குலைத்துவிட...
கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது.
காக(ம்) மொன்று
எனது நான் மட்டும்
நீண்ட நேரமாக
யாருக்கும் தெரியாமல்
என்னுடனேயே பேசிக் கொண்டிருக்கிறது.
அந்த நிசப்தத்தை குலைத்து விடாதபடிக்கு
மிக மௌனமாகவே!

-துவாரகன்-

# அப்பு மடல்

சமாதானம் வரும் முந்தியே
ஆட்சிக்கு வந்தாய் சந்திரிகா அன்டியே
வாக்குறுதி எல்லாம் காத்திலவிட்டு
வானோட வந்து நின்டியே
உன்படை அனுப்பி எம் இனத்தை
புதைத்தாய் குழி தோண்டியே
ஏ.9 ஐ திறக்க நீயும் வந்தாய்
எம்மை தாண்டியே
படை அனுப்ப உன் மாமா
பலமாய் தள்ளினார் முண்டியே
பணமும் நீ கொட்டினாய்
உலகமெல்லாம் தண்டியே
ஆனால் படை எல்லாம்
திரும்பி வந்தது உன்னிடம் நொண்டியே
மிச்சத்தை சொல்ல செஞ்சிலுவை
உங்கு தந்தது மையப் பெட்டியே
அதுகும் விளங்காட்டி ஆனையிறவுடன்
தீச்சுவாலை கண்டியே
பேந்தும் பழையபாட்டை
பெரிசா போட்டியே
அதனால் உன் பக்கம் கொஞ்சம்
நிறைஞ்சது வாக்குப் பெட்டியே
பேந்தும் காட்ட தொங்காதே
பூச்சாண்டியே
இதனால் நீங்கள் ஆக வேண்டிவரும்
ஆண்டியே
பிரச்சினையை தீர்த்துவிடு
புத்தரை வேண்டியே
இல்லாட்டி பெரிசா அதிர வேண்டி வரும்
கண்டியே

- பொன்னாலை கண்ணதாசன் -

# நெடுங்கேணியில் படையினரின் மண் அணைகள் அழிக்கப்படுகின்றன

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் படையினரால் அமைக்கப்பட்ட மண் அணைகள் தற்பொழுது அழிக்கப்பட்டு வருகின்றன.

1997ஆம் ஆண்டு ஜெயசிக்குறு படை நடவடிக்கை மூலம் நெடுங்கேணியைக் கைப்பற்றிய படையினர் தமது பாதுகாப்புக்கெனக் கிராமங்களை ஊடறுத்து மிக நீண்ட மண் அணைகளை அமைத்திருந்தனர்.

ஓயாத அலைகள் - 03 படை நடவடிக்கை மூலம் விடுதலைப்புலிகளால் இந்தப் பிரதேசம் மீட்கப்பட்டது.

இதன்பின்னர் தற்பொழுது மக்கள் அதிகளவில் மீளக்குடியமர்ந்து வரும் நிலையில், படையினர் அமைத்திருந்த மண் அணைகளை அழிக்கும்பணியை நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

நெடுங்கேணியின் சூடு விழுந்தான், சிறாம்பைக்குளம், சவாநகர், புளியங்குளவீதி ஆகிய இடங்களில் இந்தப் பணி தற்பொழுது இடம்பெற்று வருகின்றது.

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் விரைவில் மின் விநியோகம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பகுதிகளில் விரைவில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கை துரிதமாக இடம்பெற்று வருவதாகப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பி.தயானந்தா தெரிவித்தார்.

ஒட்டுசுட்டானில் இருந்து ஐயனார் கோயிலடிவரையும், பரந்தன் வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் விளையாட்டு மைதானம் வரையும், மாத்தளன் வீதியில் டொக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த வீதிவரையும், மின் இணைப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. இந்த இணைப்பு வேலைகள் முடிவடைந்ததும், உடன் மின்சாரம் வழங்கப்படும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு விரைவில் மின்சாரம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இலுப்பைக்கடவை வித்தியாலயத்தில் இருமாடிக் கட்டட தொகுதி

மன்னார் மாவட்டத்திலுள்ள இலுப்பைக்கடவை மகாவித்தியாலயத்தில் நிகொட் உதவியுடன் மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை, மடு கல்விவலயத்தின் உதவியுடன் இந்தப் பாடசாலையில் நூலக கட்டடவேலைகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பூநகரி கிராம அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி கௌதாரி முனையில் கடற்புலிகளின் பூநகரிப் பிரதேசப் பொறுப்பாளர் தலைமையில், கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

பரமன்கிராய், கௌதாரிமுனை, வில்லடி பெட்டுக்காடு, விநாசி ஓடை கல்முனை, மன்னித்தெரு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

பரமன்கிராய் தொடக்கம், கௌதாரிமுனை வரையிலான வீதித்திருத்தம் கௌதாரிமுனைப் பாடசாலையின் வேலி அமைத்தல், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் அமைத்தல் உட்படப் பல்வேறு விடயங்கள் இதில் கலந்துரையாடப்பட்டன.

# புனரமைக்கப்படாத மாந்தை பறங்கி சுற்றுப் பாலம்!

முல்லைத்தீவு மாவட்ட திராட்டிகுளம் பிரதான வீதியின் பாலம் இதுவரை புனரமைக்கப்படாமல் உள்ளது.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள திராட்டிகுளம் பகுதியில் 120 இக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்துவரும் நிலையில் இவர்களுக்கான பிரதான வீதியிலுள்ள பறங்கி ஆற்றுக்கான பாலம் இதுவரையும் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளது.

இதனால், இந்தப் பகுதி மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். பறங்கி ஆற்றின் மீதான இந்தப் பாலம் இலங்கை வான்படையால் தகர்த்து அழிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மாவட்டத்தில் கண்ணிவெடிகள் அகற்றல்

இந்திய கண்ணிவெடி அகற்றும் 'சர்வத்திரா' அமைப்பு வவுனியா மாவட்டத்தில் 6 கிராமங்களில் 3 இலட்சத்து 50 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளது.

இந்த அமைப்பு ஓமந்தைப் பகுதியில் 29 வெடிபொருட்களையும் இரண்டு வாகனத் தகர்ப்புக் குண்டுகளையும், 48 நிலக்கண்ணி வெடிகளையும் அகற்றியுள்ளது.

இதேவேளை, சாளம்பைக் குளத்தில் 7 நிலக்கண்ணி வெடிகளையும், கற்பகபுரத்தில் 14 கண்ணிவெடிகளும், கணேசபுரத்தில் 43 கண்ணிவெடிகளும் மற்றும் 3 குண்டுகளும், சமயபுரத்தில் 3 எறிகணைகளும், மரைக்காரம்பலைப் பகுதியில் 33 கண்ணிவெடிகளும் இந்த அமைப்பினால் அகற்றப்பட்டுள்ளன.

# சிறப்பாக நடைபெற்ற முத்தமிழ் கலையரங்கம்

புலிகளின்குரல் வானொலி மன்றத்தினரின் மாதாந்த முத்தமிழ் கலையரங்கம், கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கிளிநொச்சி அரசியறதுறையின் ஆதரவுடன் புலிகளின்குரல் கிளிநொச்சி பிரதேச வானொலி மன்றத்தினரால் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்வு மாலை 7.30 மணிக்கு, புலிகளின் குரல் வானொலியின் கலைஞரும், படைப்பாளியுமான பொன். காந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஈகைச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றி வைத்தார். தொடர்ந்து வரவேற்புரையினைப் புலிகளின்குரல் நிர்வாக இணைப்பாளர் ராஜேஸ்வரன் நிகழ்த்தினார். புலிகளின்குரல் வானொலி பற்றிய அறிமுக உரையினைப் புலிகளின்குரல் பிரதம செய்தி ஆசிரியர் தி.தவபாலன் நிகழ்த்தினார். தலைமையுரையை பொன்.காந்தன் நிகழ்த்தினார். சிறப்புரையினை கவிஞரும் படைப்பாளியுமான சுபாஸ் பாலகணேசன் நிகழ்த்தினார்.

இதன் பின்னர் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.




## புளியங்குளத்தில்

# சந்தை வசதியின்றி மக்கள் அசௌகரியம்

நெடுங்கேணி மற்றும் புளியங்குளம் பகுதிகளில் சந்தைகள் இன்மையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

1997ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இந்தப் பகுதியில் காணப்பட்ட சந்தைக் கட்டடங்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் சந்தைவசதிகள் இன்மையால் மீளக்குடியமர்ந்து வரும் மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யவோ, விற்பனை செய்யவோ பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் செட்டிக்குளம் மகா வித்தியாலயம்

வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயம் அடிப்படைவசதிகள் எதுவுமற்றநிலையில் நீண்ட காலமாக இயங்கிவருகின்றது.

தற்போது இந்த மகாவித்தியாலயத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர்.

இந்த நிலையில் குடிநீர் வசதியின்மை, மலசலகூட வசதியின்மை மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை போன்ற வசதிகளின்றி இந்தப் பாடசாலை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சமாதானம் ஏற்படுவது இன்றியமையாதது

## மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்

நாட்டில் இன்று இருக்கிற நிலைமைகளை பார்க்கின்ற போது போர் என்ற அரக்கன் சூழ்ந்து கொள்வானா என்ற பயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சமாதானம் ஒன்று ஏற்படுவது இன்றியமையாதது என மன்னார் மறை மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்தார்.

நாடுமுழுவதிலும் இருந்து கத்தோலிக்க இளைஞர், யுவதிகளை ஒன்றிணைத்து வவுனியாவில் சமாதானத்தை வலியுறுத்தி அமைதிப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் மற்றும் பல கத்தோலிக்க மதகுருக்களும் வவுனியாவைச் சேர்ந்த சர்வ மத பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். காலை விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான வைபவத்தில் 56 பேர் இரத்ததானம் செய்தனர். மாலை இடம்பெற்ற பேரணியில் சுமார் 600க்கும் மேற்பட்ட கத்தோலிக்க மதத்தை சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்ட ஆயர் ஜோசப், பேரணி முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் -

அனைத்து மதங்களையும் சேர்ந்தவர்களும் சமாதானத்தினை அனுபவிக்க வேண்டும். சமாதானமானது நீதியின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும். அப்போது தான் அது சமாதானமாக அமையும் ஆனால், இன்று நாட்டில் இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கின்றபோது, இது பெரிய பயமாக உள்ளது.

அண்மைய நாட்களாக இடம்பெறும் கொலைகள், சமாதானத்தினை குலைத்து மீண்டும் ஒரு யுத்தத்துக்கான ஆயத்தமாக இருக்கின்றதா என்று எண்ணத் தோற்றுகிறது.

வீணான அரசியல் இலாபத்துக்காக மீண்டும் ஒரு போர் ஏற்பட வேண்டும் என்று தென்னிலங்கையின் சில அரசியல்வாதிகள் முயற்சித்துக்கொண்டுள்ளனர்.

இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதற்காகவேதான் இன்று இந்த இளைஞர்களுக்கு சமாதானத்தின் தேவையைப் பற்றி உணர்த்தியுள்ளோம் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்துக்கு முழு நேர மின் விநியோகம்

(பளை)

பச்சிலைப் பள்ளி பிரதேசத்துக்கு கடந்த மாதம் 30ஆம் திகதி முதல் 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்பொழுது வழங்கப்பட்டுள்ள மின் வழங்கல் மூலம் அலுவலக வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருவதாகவும், இது ஒரு உந்துசக்தியாக உள்ளதெனவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலர் சிவராசா தெரிவித்தார்.

மேலும், பளைப்பகுதியில் உள்ள வீடுகள் அனைத்துக்கும் மின்சாரம் வழங்கப்பட வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த மாதம் 24ஆம் திகதி தொடக்கம் பளைப் பகுதிக்கு 24 மணிநேர மின்சாரம் வழங்கப்பட்டது. எனினும், இம்மின் விநியோகம் பிரதான வீதியிலுள்ளோருக்கு மாத்திரமே வழங்கப்பட்டது. எனவே பளைப் பகுதியிலுள்ள வீடுகளுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, மின் அத்தியட்சகரை பளைப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

## "விழி" மருத்துவ இதழ் வெளியாகியது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி பணிமனையால் வெளியிடப்படும் "விழி" மருத்துவ இதழ் கடந்த 04ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இதழ் 48ஆவது இதழாக வெளிவந்துள்ளது. விசர் நாய்க்கடி நோய்க்குரிய தடுப்புமுறைகள், யோகாசன மருத்துவம், கர்ப்பவதிகள் உடல் நலன் போணும்முறைகள், நலன் காப்போம் கட்டுரையின் 12ஆவது தொடர் போன்ற பல்வேறு அம்சங்களைத் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.




கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற புலிகளின் குரல் வானொலி மன்றத்தினரின் மாதாந்த முத்தமிழ் கலையரங்கு நிகழ்வுகளிலிருந்து சில காட்சிகள்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சர்வகட்சிகளுடன் கலந்துரையாடல் மற்றொரு காலம் கடத்தும் முயற்சியே

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கு முன்னர், அது குறித்து, அதாவது சமாதானப் பேச்சுக்களை எவ்வாறு ஆரம்பித்து முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து அனைத்துக் கட்சிகளினதும், ஏனைய பொது அமைப்புக்களினதும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், அவற்றுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஐம்பத்து மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது.

சர்வகட்சிகளின் ஆலோசனைகளை இனப் பிரச்சினைத் தீர்வுக்கான வழிமுறைகளை ஆராய அரசு பெறுவதென்பது இதுதான் முதல் தடவையல்ல. பல தடவைகள் இம் மாதிரியிலான சர்வகட்சி மாநாடுகள் கூட்டப்பட்டுள்ளன, ஆராயப் பட்டுள்ளன, அதுபற்றி அறிக்கைகளும் வெளியிடப் பட்டுள்ளன.

ஆரம்பத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இவ்வாறான சர்வகட்சிமாநாடு, வட்டமேசைமாநாடு, பொதுஅமைப்புக்களின் ஆலோசனை மாநாடு எனப் பல்வேறு சந்திப்பு அரங்குகளை ஏற்பாடுசெய்து தானும் ஏதோ சமாதான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடுவதாகப் பாசாங்கு காட்டி காலத்தைக் கடத்தினார்.

பின்னர் பிரேமதாஸாவும் அதேபோன்ற உத்திகளை ஆரம்பத்தில் கையாள முயன்றார். எனினும் அந்த நடவடிக்கைகள் யாவும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பான எந்தவிடயத்தையும் ஆழமாகவும், விசுவாசத்துடனும் ஆராயும் தன்மை கொண்டதாக இருந்தது கிடையாது. மாறாக பிரச்சினைகளை மேலும் குழப்பவும் சிக்கலாக்கவுமே இத்தகைய சந்திப்புக்களும், மாநாடுகளும் கலந்துரையாடல்களும் பயன்பட்டன என்றால் மிகையில்லை.

இதன்காரணமாக இத்தகைய சர்வகட்சி மாநாட்டு கலந்துரையாடல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் அனைத்துமே யுத்தத்தை மீள ஆரம்பிப்பதில் தான் முடிவடைந்தன.

இப்போது ஜனாதிபதி மீண்டும் அதே போன்றதோர் மூலோபாயத்தையே கடைப்பிடிக்கிறார் போலுள்ளது.

இன்றைய சூழலில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு சர்வகட்சி ஆலோசனைகள் மேற் கொள்ளப்பட வேண்டிய அவசியமே கிடையாது.

மீள ஆரம்பித்தல் என்பது புதிதாகத் தொடங்குதல் என்ற அர்த்தத்தைக் கொண்டதாகாது.

விடுபட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட இடத்திலிருந்து தொடங்குதல் என்ற கருத்தையே அது கொண்டதாக இருக்கும். விடுபட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டிய பேச்சுவார்த்தையின் அடித்தளம் இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்த விடயத்தை ஆராய்வதாகவே இருக்கமுடியும்.

ஏற்கனவே இந்த இடைக்கால நிர்வாக அதிகார சபை தொடர்பான பேச்சுக்களை முற்றாகவும், பகிரங்கமாகவும் எதிர்க்கும் கட்சிகளே அதிகமாக உள்ள இலங்கையின் அரசியலில் சமாதானத்தை நிராகரிக்கும் பேரினவாதிகளின் குரலே தற்போது ஓங்கி ஒலித்து வருகின்றது.

இந்தச் சூழலில் அத்தகைய கட்சிகளை அழைத்து சமாதான முயற்சிகள் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்வதால் என்ன அனுகூலம் ஏற்படுமென்று தெரியவில்லை.

அக்கட்சிகள் நிச்சயமாக சமாதானமுயற்சிகளை ஆதரித்து ஆலோசனைகளைக் கூறப்போவது கிடையாது அப்படி கூறினாலும்கூட அந்த ஆலோசனைகள் சமாதானமுன்னெடுப்புகளுக்கு இலகுவான வழிகளை அமைத்துக் கொடுக்கும் என நம்புவது கடினமாகும்.

இதேவேளை அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான அரசியல் தீர்வொன்றை எட்டுவதென்பது கடினமானது என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி, பிரச்சினை தமிழர் சம்பந்தப்பட்டது என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதான தீர்வொன்றைக்காண்பதே முக்கியம் என்பதையும் உணரவேண்டியது அவசியமாகும்.

சமாதானம் நாட்டிற்கு முக்கியம் என்பதை ஜனாதிபதி மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வாரேயானால் அதற்கு பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தல் அவசியம் என்பதையும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.


அத்தகைய பேச்சுவார்த்தைகளை வெறுமனே கட்சி அரசியலவாதிகளின் கருத்து நிலைக்குட்பட்டதாக, கொள்கை நிலைக்குட்பட்டதாக வரையறை செய்வதென்பது நியாயமான தீர்வொன்றை எட்டுவதற்கான வாய்ப்பினை எந்த வகையிலும் வழங்காது என்பதே யதார்த்தமாகும்.

ஏற்கனவே சமாதான முயற்சிகளை முன்னெடுக்க நோர்வே அரசின் அனுசரணையைக் கோரிப் பெற்றுள்ள ஜனாதிபதி தேசிய சர்வதேச அரசியல் யதார்த்தங்களை சரியாக மதிப்பீடு செய்து நாடுஎதிர்கொள்ளத் தொடங்கியுள்ள ஆபத்துக்களை கருத்தில்கொண்டு, வெறுமனே கட்சியரசியலுக்கப்பால் தேசிய நலன் கருதிய நோக்கில் செயற்படமுனைந்தாலேயன்றி, சர்வகட்சி மாநாடு, கலந்துரையாடல், கருத்துப்பகிர்வு என மினக்கெடுதலில் எவ்விதமான ஆக்கபூர்வமான நலனையும் காண முடியாது.

அத்துடன் மீண்டும பேச்சுக்களை 'அ' னாவிலிருந்து தொடங்கும் முயற்சியாகவே அது கருதப்படும்.

இன்றைய சமாதானச் சூழலுக்கு வயது மூன்றாகப் போகிறது என்பதையும் ஜனாதிபதி கருத்தில் கொள்வது அவசியமாகும்.

## நாடும் நடப்பும்




# புலிகள் மீளவும் போரில் ஈடுபட்டால் அதனை முறியடிக்க தயாராக வேண்டும்

## யாழ் - படைஅதிகாரிகளிடம் சாந்த கொட்டேகொட தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமாதான செயற்பாடுகள் முறிவடைந்து புலிகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட முனைந்தால் அவர்களை முறியடிக்கத் தியாக சிந்தனையுடன் செயற்படத் திடசங்கற்பம் பூண வேண்டும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல சாந்த கொட்டே கொட - யாழ்.மாவட்ட சிரேஷ்ட படை அதிகாரிகளிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று பலாலியில் நடைபெற்ற சிரேஷ்ட படை அதிகாரிகளுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்.குடாநாட்டுக்கு வருகை தந்த இராணுவத் தளபதி - தீவகம், வலிகாமம், வடமராட்சி, நாகர்கோயில், எழுதுமட்டுவாள், கிளாலி ஆகிய பகுதிகளிலுள்ள இராணுவத் தளங்களுக்கு யாழ்.குடாநாட்டுக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனுடன் சென்று தளநிலைமைகளை ஆராய்ந்ததுடன், கடந்த காலங்களில் விடுமுறைகள் இன்றியும், விசேட கவனிப்புகள் இல்லாமையாலும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள படையினரைச் சந்தித்து அவர்களுக்கு உற்சாகமூட்டும் முயற்சியிலும ஈடுபட்டார்.

இந்த மாநாட்டில் படைத்தளபதி மேலும் கருத்துத் தெரிவிக்கையில் - அரசாங்கம் சமாதான முயற்சிகளில் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறது. இருந்தாலும் இந்த நாட்டைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்புப் படையினரிடமே உள்ளது. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக யார் செயற்பட்டாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு பாதுகாப்புப் படைகளுக்கே உரியது.

இந்த நாட்டின் பாதுகாவலர்களாக இருக்கின்ற நீங்கள் எதற்கும் தயாராக இருக்கவேண்டும். இதன்பின்னர் படையினரின் குறைநிறைகளை இராணுவத் தளபதி கேட்டபோது, படையினர் தங்களுக்கு நவீனரக ஆயுதங்களைப் பெற்றுத்தருமாறு இராணுவத் தளபதியிடம் கோரிக்கை விடுத்தனர். விடுதலைப் புலிகள் தற்போது நவீனரக ஆயுதங்கள் பலவற்றைப் பெற்றுள்ளதால் இராணுவச் சமநிலையைச் சீர்செய்யும் வகையில் நவீனரக ஆயுதங்களைப் பெற்றுத் தாருங்கள் எனப் படையினர் கோரிக்கை விடுத்தனர்.

படையினர் போக்குவரத்துக்கு துரித ஏற்பாடுகளின் அவசியம் பற்றியும் இங்கு ஆராயப்பட்டது. உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டங்களின் போது இராணுவத்துக்கு கெட்டபெயர் வராமல் மக்களுடன் எவ்வாறு நடந்துகொள்வது எனவும், தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயங்களைப் பேணுவது எனவும் இந்த மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இராணுவத் தளபதி, யாழ் நகரிலுள்ள இராணுவத்தின் 512 ஆவது படைப்பிரிவுத் தளத்திலேயே தங்கியிருந்தார். பெரும்பாலும் பாதுகாப்புக் கருதி பலாலி தளத்தில் தங்கியிருக்கும் படைத் தளபதிகளிடையே சாந்த கொட்டேகொடவின் நடவடிக்கை மாறு பட்டிருந்தது.

யாழ்.நகரின் கரையோரப்பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரை வழிநடத்தும் மையமாக குறித்த 512 ஆவது படைத்தளமே அமைந்துள்ளது. இந்த நிலையில் குறித்த படைப் பிரிவுகளின் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட படை அதிகாரிகளை அவர் 512 ஆவது படைத்தளத்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தரம் ஒன்றுக்கான மாணவர் அனுமதிக்கு நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுகின்றன

யாழ்.குடாநாட்டிலுள்ள பிரபல்யமான அரச பாடசாலைகளில் அடுத்த வருடத்தில் தரம் ஒன்றில் மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் தற்பொழுது நடைபெற்றுவருகின்றன. இந்த நேர்முகப் பரீட்சைகளை இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நடத்திமுடித்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களது பெயர் விபரங்களை குறிப்பிட்ட பாடசாலைகள தமது அறிவித்தல் பலகைகளில் பகிரங்கப் படுத்தவேண்டும் என கல்வி அமைச்சால் அறிவுறுத் தப்பட்டுள்ளது.

இந்தமாதம் 15 ஆம் திகதி தொடக்கம், 30 ஆம் திகதி வரை இவை தொடர்பான ஆட்சேபனைகளைப் பெற்றோர் தாக்கல் செய்யமுடியும் என்றும், அடுத்தமாதம் முதலாம் திகதிமுதல் பதினைந்தாம் திகதிவரை ஆட்சேபனைகள் விசாரணைக்கு எடுத்துககொள்ளப்பட்டு, அதன்பின்னர் பாடசாலைகளில் இணைதது்க்கொள்ளப்படவுள்ள மாணவர்களது பெயர்கள் அடங்கிய இறுதிப்பட்டியல் அடுத்தமாதம் 20 ஆம் திகதிமுதல் குறித்த பாடசாலை விளம்பரப் பலகையில் பகிரங்கப்படுத்தப்படல்வேணடும் என்றும் கல்வியமைச்சால் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே கடந்தமாதம் இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்தமாத இறுதிக்குள் வெளியிடப்படும் எனவும், சித்தியடைந்த மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் உடன் ஆரம்பிக்கமுடியும் எனவும் தெரியவந்துள்ளது. (31)

# சிறுவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை சட்ட ரீதியான ஒரு குற்றச் செயலாகும்!

## அரச சட்டத்தரணி செல்வி சுகந்தி கந்தசாமி

பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் யாராக இருப்பினும் அவர்களால் சிறுவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் சிறுவர்களைப் பாதிக்கக்கூடியதாக இருப்பின் அவை எந்த நோக்கத்தில் வழங்கப்பட்டிருப்பினும் அந்தச் செயல் தண்டனைக்குரிய குற்றமாகவே கருதப்படும் என நேற்றுமுன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில், சட்டத்திற்கும் சமூகத்திற்குமான அற நிலையம் ஏற்பாடு செய்திருந்த "பாலியல் குற்றச்செயல்கள் தொடர்பான நடைமுறை சாட்சிய, சட்ட மருத்துவ விடய நிகழ்வு" தொடர்பான நான்காவது பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில் அரச சட்டத்தரணி செல்வி சுகந்தி கந்தசாமி இவ்வாறு தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ உட்பட யாழ்.மாவட்ட பொலிஸ் அதிகாரிகள், மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள், சட்டத்தரணிகள், மருத்துவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில் -

தற்போது எமதுபகுதிப் பாடசாலை மாணவர்களிடையே குறிப்பாக உயர்தர மாணவரிடையே விரும்பத்தகாத சிந்தனை மாற்றங்கள ஏற்பட்டுள்ளன. ஏ-9 பாதை திறப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி என்பன பல்வேறு நன்மைகளைத் தந்திருப்பினும், மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள விரும்பத்தகாத சிந்தனை மாற்றங்களுக்கும் இவையே காரணமாகவும் அமைந்து விடுகின்றன. இவற்றோடு வெளிநாடுகளில் இருந்துவருகை தரும் உறவினர்களது கலாசாரப் பாதிப்புக்களும் அவர்களைத் தாக்குகின்றன.

பெண்கள் தொடர்பான பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் பாலியல் வன்முறைக் குற்றச்செயல்களின்போது சமூக ஒத்துழைப்பு போதியளவு கிடைக்கும் பட்சத்திலேயே சட்ட நடவடிக்கைகளை எடுக்கமுடிகிறது. பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்க வழியேற்படுகிறது. ஆனால், சமூகத்தில் இன்று இவ்வாறான ஒத்துழைப்புக் கிடைப்பது மிகவும் குறைவாகவே உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (31)

சர்வதேச அரசியல் நோக்கு...

கே.ரீ.கணேசலிங்கம்

# ரஷ்ய பணயக் கைதிகள் விவகாரம்; பின்னணியில் ஆக்கிரமிப்பு சக்திகளா?



'பெல்தான்' பாடசாலை உலகத்தில் எந்த திசையிலிருக்கும் மக்களாலும் இலகுவில் மறக்கக்கூடியதொன்றல்ல. 320 ரஷ்யர்களை காவு கொண்டதும், அதில் 150 ற்கு மேற்பட்டவர்கள் பாடசாலைச்சிறார்கள் என்பதும் மறக்கமுடியாத துயரமாக விளங்குகின்றது. மிக அண்மையில் கும்பகோணத்தில் நடந்த செயலுக்கு ஒப்பான ஒன்றாக விளங்கும் இந்தப் பணயக்கைதிகள் விவகாரம் ஒருவாறு முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால், கடந்த ஆண்டு இவ்வாறான ஒரு சம்பவம் மொஸ்கோவில் நடைபெற்றது. நாடகக்கொட்டகை ஒன்றுக்குள் புகுந்த செச்சினிய ஆயுததாரிகள் நடத்திய பணயக்கைதிகள் விவகாரம் போன்றே இதுவும் காணப்படுகின்றது.

அன்றைய பணயக்கைதிகள் விவகாரத்தின் பின்னால் ஆதிக்க சக்திகளின் மறைகரம் செயல்பட்டதென அப்போது ரஷ்ய ஜனாதிபதி புரிந்துகொண்டார். தற்போதும் ரஷ்யா யாருடைய எச்சரிக்கைக்கும் அடிபணிந்துவிடாது என சூளுரைத்துள்ளார். அதே ரஷ்ய ஜனாதிபதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவின் இன்றைய அரசியல் களத்துக்குரிய அடிப்படையை மிகத் தெளிவாக விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். செச்சினிய விடுதலைப் போராட்டம் ஒரு புறமாக நிகழும் போது, அங்குள்ள அரசியல் ஜனநாயக நடவடிக்கைகளும் மறுபுறமாக நடைபெற்றுவருகின்றது. அதன் ஒரு கட்டம்தான் செச்சினிய ஜனாதிபதியாக 73.67 சதவீத வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ள அனு அல்ஹனோவ்ன் வெற்றிபெற்ற வாய்ப்பு அமைந்திருந்தது. ஏறக்குறைய 85.25 சதவீதமான வாக்கு மக்களால் அனு அல்ஹனோவ்ன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால், செச்சினிய ஜனாதிபதியின் தெரிவு தவறானதெனவும், மோசடியானதெனவும் விமர்சிக்கும் செச்சினிய ஆயுதப் போராட்ட அமைப்பின் குற்றச்சாட்டு நியாயமற்ற தொன்றாகவே அயல் குடியரசு கண்காணிப்பாளர்களின் மதிப்பீடாகவுள்ளது.

அனைத்து அயல் குடியரசு தேர்தல் கண்காணிப்பாளர்களும் செச்சினிய ஆயுததாரிகளுக்கு ஏன் எதிராக செயற்படுகின்றார்கள் என்பதும், அதனால் செச்சினிய ஆயுத அமைப்பு குற்றம் சாட்டுவது தவறானதெனவும் கூறலாம்.

• ஆனால், செச்சினிய ஆயுதப் பிரிவினர் கூறுகின்ற குற்றச்சாட்டுக்கு வலுவான நியாயமான காரணமொன்றுள்ளது. அதுவே அனு அல்ஹனோவ்ன் ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஆயுதப் போராட்டம் கூட்டாகவும், தனித்தும் செச்சினிய மண்ணில் பிசுபிசுத்துவிடுமென அஞ்சுகின்ற நிலமை ஏற்பட்டுள்ளது. இவ் அச்சுறுத்தல் மறைகரமாக செயல்பட முயலும் ஆதிக்க சக்திகளுக்கு எச்சரிக்கையாக அமைவதோடு, உண்மையான செச்சினிய தனிநாட்டுக்கோரிக்கை என்பது பலவீனமாக மாறிவிடும் என்பதும், அவர்களது கவலையாகும். இதனாலேயே, செச்சினிய தரப்பும் - செச்சினிய தரப்பை பயன்படுத்தும் தரப்பும் பாதிப்படைய வாய்ப்புண்டு. எனவே, இந்தப் பாடசாலை சிறுவர்கள் பணயக் கைதிகளாக்கப்பட்ட விவகாரம் இரண்டு தரப்பாலும் சாத்தியப்பட்டிருக்கலாம். அதில் நேரடியாக போராட்ட அமைப்பு உரிமைகோராது. வேறுபட்ட இஸ்லாமிய பிரிவு உரிமைகோருவதென்பதும் பிறசக்திகளின் நடவடிக்கைக்குரிய வாய்ப்பை அதிகம் முதன்மைப்படுத்த விரும்புகின்றது. இதற்கு வலுவான இன்னோர் காரணத்தையும் கோடிட்டுக் காட்டலாம்.

பாடசாலைச் சிறுவர்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டதன் மூலம் செச்சினியப் போராளிகள் எனக்கருதப்படுபவர்கள் சாதித்தது என்ன என்பதாகும். இது போராட்டமா? இதன் மூலம் விடுதலை எட்டலாமா? அரசாங்கத்தின் சொத்துக்களை பாதிப்பது அதன் பொருளாதார நிலைகளைத் தகர்ப்பது என்னவோ, செச்சினிய விடுதலைக்கு உதவுமெனக் கூறலாம். ஆனால், ரஷ்ய மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிப்பதன் மூலம் செச்சினியா விடுதலை அடைய முடியுமா? இவ்வாறான பழிவாங்கல்கள் செச்சினியா சுதந்திர தேசமாகுமென எடைபோடுவது மிகத் கீழ்தரமான அல்லது மூன்றாம் தரமான முடிவாகும்.

பணயக்கைதிகள் விவகாரத்தில் கொல்லப்பட்ட அதிகமானவர்கள் கடத்திய ஆயுததாரிகளின் தவறுதலான குண்டு வெடிப்புக்களின் மூலமே உயிரிழந்தவர்கள் என தப்பிய ரஷ்ய பணயக்கைதி கூறுகின்றார்.

சிறுவர்களையும், பெற்றோர்களையும் மந்தைகள் போன்று கையாண்ட விதம் குறுகிய பகுதிக்குள் அதிகமானவர்களை அடைத்து வைத்திருந்தமை மற்றும் உரிய கடமையை முடிக்கக்கூட அனுமதியாத நிலைமைகளைப் பார்க்கும்போது, ஒரு போராட்ட அமைப்பு இவ்வாறு நடந்துகொள்ளுமெனக் கூறமுடியாது. உண்மையில் ஒரு போராட்ட அமைப்பு நடந்துகொள்ளக்கூடாது.

அதுவே, அசல் பயங்கரவாதமாகும். செச்சினிய விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளும் அதே வேளை, செச்சினியப் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயல்படுவதெனக் கூறிக்கொண்டு, அவ் விடுதலைப் போராட்டத்தையே அழிவுக்கு கொண்டுசெல்லும் நடவடிக்கை

**ஆயுதப்போராட்டமானது, ஆயுத வன்முறையுடன் முடிவடையுமாயின் அது பயங்கரவாதமாகவே நோக்கப்படும். அதற்கு தனித்துவமான அரசியல் தந்திரம், உபாயம், இராணுவநகர்வு என்பவற்றுடன் அடிப்படை உரிமைகளையும், பிற இனத்தின் சுதந்திரங்களையும் மதிக்கக்கூடிய பலமும், சமகால உலகப் போக்கை மதிப்பீடுசெய்து செயல்படும் போக்கும் காணப்படுமாயின் அதுவே, விடுதலைக்கு சரியான அணுகுமுறையாக அமையும்.**



அல்லவா அவை செய்கின்றன. இது போராட்டத்தை அழிவுக்குகொண்டு செல்லும் நடவடிக்கையாகவே உள்ளது. யதார்த்தமான விடுதலைப் போராட்டங்களில் மிக மோசமான ஊடுருவல்களையும், ஆக்கிரமிப்பையும் கொண்டிருக்கும் அமைப்பாக செச்சினியா காணப்படுகின்றது.

இப் பணயக்கைதிகள் விவகாரம் நிகழ்வதற்கு முன்பு, இன்னோர் நிகழ்வும் செச்சினியாவுக்கு ஆதரவாகச் செய்யப்பட்டது. ரஷ்யாவின் இரண்டு விமானங்களை குண்டு வைத்து வானத்திலே தகர்த்த சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. ஏறக்குறைய 89 க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்ட நிகழ்வானது இஸ்லாம் போலி பிறிகேட் என்ற அமைப்பால் மேற்கொள்ளப்பட்டதென உரிமைகோரப்பட்டது. இவ்விபத்தை விசாரித்த விசாரணைக் குழு குண்டுத்தாக்குதலே விபத்துக்கு காரணம் எனக் கூறியது. இவ்வாறு ரஷ்ய விமானங்கள் பல அடிக்கடி விபத்துக்குள்ளாகும் நிகழ்வுக்கும், செச்சினியப் போராட்ட அமைப்புக்கும் தொடர்புண்டு என கூறப்படுகின்றது. ஆனால், இதனால் பாதிக்கப்பட்ட ரஷ்யர்களிடமிருந்தும், அரசாங்கத்திடமிருந்தும் மிகமோசமான எதிர்ப்பை செச்சினியா சந்திப்பதுடன், போராட்டத்தின் அடிப்படை நியாயத்தன்மையையே அவ்வின மும் போராட்ட அமைப்பும் இழந்து விடுகின்றது.

ஆயுதப் போராட்டமானது, ஆயுத வன்முறையுடன் முடிவடையுமாயின் அது பயங்கரவாதமாகவே நோக்கப்படும். அதற்கு தனித்துவமான அரசியல் தந்திரம், உபாயம் இராணுவ நகர்வு என்பவற்றுடன் அடிப்படை உரிமைகளையும் , பிற இனத்தின் சுதந்திரங்களை மதிக்கக் கூடிய பலமும், சமகால உலகப் போக்கை மதிப்பீடுசெய்து செயல்படும் போக்கும் காணப்படுமாயின் அதுவே, விடுதலைக்கு சரியான அணுமுறையாக அமையும். சமகால சர்வதேச விதிமுறைகளுக்குள் கொலைகளை மேற்கொள்வதன் மூலமும், பணயக்கைதி களை பிடிப்பதன் மூலமும், ஓர் இனத்தின் விடுதலை என்பது சாத்தியமடையப் போவது கிடையாது. எப்படி உலகம் சில தனியாளுமைக் கோட்பாடுகளிலிருந்து விடுபட்டுச் செயல்படுகின்றதோ அதேபோன்று விடுதலைப் போராட்டத்தை நடாத்தும் மக்களும் செயல்படவேண்டும். உலகம் போட்ட வரம்புகளை விரிவுபடுத்தியதற்கு இணையாக, விடுதலைப் போராட்ட அமைப்புகளும் மாறுதல்வேண்டும். அவ்வாறு மாறுகின்ற போக்கு சரிவரப் பின்பற்றப்பட்டால் மட்டுமே - விடுதலைப் போராட்டமும், விடுதலையும் சாத்தியப்படும். தனித்த ஆயுதப்போராட்ட அணுகுமுறை அநாகரிகமான அரசியலுக்கு வித்திட்டுவிடும். எனவே, செச்சினியப் போராட்ட அமைப்புக்குச் சார்பாக உழைக்கும் ஏனைய இஸ்லாமியப் பிரிவுகள் மேற்கொள்ளும் அணுகு முறைகள் பயங்கரவாதத்துக்கு ஒப்பான வேலைகளையே ஆற்றுகின்றது. இதுவே பயங்கரவாதம். இத்தகைய வேலைகளைத் தூண்டுவதும் பயங்கரவாதமேயாகும். எனவே, செச்சினியப் போராட்டம் சார்பாக மறைகரமானது. தனது ஊடுருவலை மேற்கொண்டு ரஷ்சியாவையும், அதன் அரசியல் தலைமையையும் ஆட்டங்காண முயற்சிக்கின்றதென்றே கூறலாம்.



ரஷ்சிய ஜனாதிபதி புடின் இன்னோர் செய்தியையும் வெளிப்படுத்தினார். பிறசக்திகளின் எச்சரிக்கைக்கு ரஷ்சிய அடிபணியாதது மட்டுமன்றி, அவ்வாறு அடிபணிந்து பல இலட்சக்கணக்கான ரஷ்சியர்கள் இனக்கலவரத்தால் அழிந்துவிட அனுமதிக்கவும் முடியாதது என்பதாகும். எனவே, இது ரஷ்சிய - செச்சினிய இனமோதல் என்பது பிற சக்திகளால் வழிநடத்தப்படுகிறதென்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

மறுபக்கத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு இது முதலாவது எச்சரிக்கை அல்ல. ஏற்கனவே ஒரு பணயக்கைதிகள் விவகாரத்தில் மக்களிடம் மன்னிப்புக்கோரி நின்ற ஜனாதிபதி மீண்டும் ரஷ்சியாவைக் காப்பாற்ற முடியாத தலைவராக விளங்கியுள்ளார். இவ்வாறான சம்பவங்கள் முடிந்தபின்பு பாதுகாப்புப் பலப்படுத்தப்படுமென்பது சாதாரணமாக எல்லா நாட்டுத் தலைவர்களும் வெளியிடுவது போன்ற செய்திதான். ஆனால், இதனால் ஏற்படப் போகும் மாறுதல் ரஷ்ய மக்களுக்கு வாய்ப்பளிக்கப் போவதில்லை.

மேலும், ரஷ்சிய இராணுவம் - பாதுகாப்புத்துறைகள் ஏனைய உளவாளிகளாலும், நாடுகளாலும் விலைக்கு வாங்கப்படுகின்ற நிலை மிக மோசமாகவே காணப்படுகின்றது. சாதாரணமாக உயர் அதிகாரிகளே விலைக்குப்போகும் நிலை காணப்படுகின்றது. ஓர் ஒட்டுமொத்தமான ஊழலற்ற அரசியல் போராட்டமொன்றை புடின் நடத்துவாராயின் ரஷ்சியாவால் மாற்றம் காணமுடியுமேயன்றி வேறு எந்த மார்க்கமும் ரஷ்சியர்களைப் பாதுகாக்கக்கூடியதாக அமையாது. ரஷ்சியர்களின் அரசியல் வரலாற்றில் புடின் தனித்துவமான அரசியல் தலைவர் என்பதுபற்றி இதே பந்தியில் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதனால், புடின் தனது காலத்தில் ஊழலற்ற ஓர் அரசை ரஷ்சியாவுக்குரியதாக ஆக்கவேண்டிய பொறுப்புடைய தலைவராகக் காணப்படுகின்றார்.

இவ்வாறு ரஷ்சியாவுக்குள் மட்டுமன்றி முழு உலகத்திலும் ரஷ்சியாவுக்கெனத் தனித்துவம் ஒன்றுள்ளது. பொருளாதாரத்திலும், அபிவிருத்தியை நோக்கிய நகர்விலும் மிக மோசமான நிலையிலிருந்து வளர்ந்துவரும் ரஷ்சியா மீளவும் உலக சமநிலையைப் பேணும் விதத்தில் வளருவது அவசியம். இங்கே தான் ரஷ்சியாவுக்கும், பிற சக்திகளுக்கும் இடையில் தீவிர முறுகல் தன்மை காணப்படுகின்றது. ஈராக் போரை அமெரிக்க - பிரித்தானிய கூட்டுப் போராகத் தனித்து மாற்றியதில் அதிக பங்கெடுத்த ரஷ்சியா தற்போது பொருளாதாரப் போட்டியிலும், தந்திரமான அரசியல் அணுகு முறையிலும் அதிக கவனம் செலுத்திவருகிறது. இத்தகைய கவனத்தால் நேரடியா[illegible] ஆதிக்க சக்திகள் பாதிப்படைய வாய்ப்புக் காணப்படுவதுடன், அவற்றுக்குச் சவாலாக எதிர்காலத்தில் ரஷ்சியா மாறிவிடும் என்பதே சர்ச்சையாகும். அதனை நேரடியாக வெளிப்படுத்தாது மறைமுகமாக வெளிப்படுத்துகின்ற போக்கை அந்தச் சக்திகள் கடைப்பிடித்து வருகின்றன. இன்னோர் விடயத்தை நினைவுபடுத்தலாமெனக் கருதுகிறேன்.

ஐரோப்பிய யூனியன், நேட்டோ அமைப்பு என விஸ்தரிக்கப்பட்டு கூட்டான பொருளாதார அபிவிருத்தி, பாதுகாப்பு என்ற கோணத்தில் பல நடவடிக்கைகள் நிகழ்கின்றன. இதில் அனைத்துக் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மட்டுமன்றி, முன்னாள் சோவியத் குடியரசுகளும் அங்கம் பெற்றுவருகின்றன. அத்தகைய நாடுகளுக்கும், அதன் ஆட்சிக்கும் ஏற்றவகையில் கொள்கைகளையும், வரைபுகளையும் இயைபாக்கம் செய்து விஸ்தரிப்பில் ஈடுபடும் அமைப்புக்கள் ரஷ்சியாவை இணைப்பதிலோ, அங்கத்துவ அந்தஸ்தைக் கொடுப்பதிலோ கவனம் கொள்ளவில்லை. எனவே, இன்னும் ரஷ்சியாவைக் கண்டு உலகம் அச்சமடைகிறது. இதுவே, பிறசக்திகளின் ஊடுருவலுக்கும், நெருக்கடிக்கும் காரணமாகின்றதெனக் கூறலாம்.

எனவே, ரஷ்சியாவின் அரசியலில் நிகழ்ந்துவரும் துயரான தொடரான நிகழ்வுகள், வன்முறையின் பிரதிபலிப்புக்கள் பிறசக்திகளின் ஊடுருவலாகவே அமைகின்றது. ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்ளும் எந்த அமைப்பும் விரும்பாத, மேற்கொள்ளாத ஒரு விடயத்தை சில சக்திகள் மேற்கொள்கின்றன. இதற்கு ரஷ்சிய உயர் அதிகாரிகளும், ஊழல் பெருச்சாளிகளும் உடந்தையாக இருப்பதையும் காணமுடிகின்றது.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

## நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு

01. யா/ந/ 110 திரு. நாகமுத்து முத்துக்குமாரு
02. யா/ந/ 156 திரு. சுப்பையா தியாகராஜா
03. யா/ந/ 184 திரு. நா.சிவகுரு நடராசா
04. யா/ந/ 301 திரு. கந்தையா வினாயகமூர்த்தி
05. யா/ந/ 532 திரு. அம்பலவாணர் செல்வரட்ணம்
06. யா/ந/ 577 திருமதி.அரியநாகேஸ்வரி கிருஷ்ணபிள்ளை
07. யா/ந/ 586 திரு. துரையப்பா நடராசா
08. யா/ந/ 592 திரு. சண்முகம் விஜெயரத்தினம்
09. யா/ந/ 594 திரு. பாலகிருஷ்ணன் முத்துக்குமாரு
10. யா/ந/ 611 திரு. செல்லப்பா சுப்பிரமணியம்
11. யா/ந/ 705 திரு. ஐயாத்துரை கயிலாயநாதன்
12. யா/ந/ 726 திரு. மாணிக்கவேல் மகேசரெட்ணம்
13. யா/ந/ 831 திரு. சின்னத்தம்பர் சிவபாதசுந்தரம்
14. யா/ந/ 835 திரு. சீவரெட்ணம் உதயகுமார்
15. யா/ந/ 846 செல்வன். சின்னராசா சண்முகானந்தன்
16. யா/ந/ 858 திரு. முருகேசு சோமசுந்தரம்
17. யா/ந/ 946 திரு. விசுவநாதி கந்தையா
18. யா/ந/ 1055 திரு. கந்தையா சபாபதிப்பிள்ளை
19. யா/ந/ 1056 திருமதி. ஜெயரஞ்சிதம் சிவலிங்கம்
20. யா/ந/ 1104 திருமதி. தெய்வநாயகி சுந்தரலிங்கம்
21. யா/ந/ 1159 திரு. சின்னப்பா கார்த்திகேசு
22. யா/ந/ 1200 திரு. நல்லதம்பி விசுவநாதபிள்ளை
23. யா/ந/ 1208 திரு. வல்லிபுரம் பேரம்பலம்
24. யா/ந/ 1226 திரு. ஆ.சரவணமுத்து இராஜேந்திரம்
25. யா/ந/ 1263 திருமதி. சவுந்தரம் விஜயரத்தினம்
26. யா/ந/ 1346 திரு. கணபதி சிவலிங்கம்
27. யா/ந/ 1359 திரு. கார்த்திகேசு தருமலிங்கம்
28. யா/ந/ 1408 திரு. சிவராஜா சிவஜீவன்
29. யா/ந/ 1464 திரு. பொன்னம்பலம் பொன்னுத்துரை
30. யா/ந/ 1487 திரு. சீவரத்தினம் தாமோதரம்பிள்ளை
31. யா/ந/ 1506 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
32. யா/ந/ 1548 திரு. செல்லையா திருநாவுக்கரசு
33. யா/ந/ 1621 திரு.செல்லையாஐயர் மகேஸ்வரக்குருக்கள்
34. யா/ந/ 1669 திரு. பொன்னம்பலம் சேனாதிராசா
35. யா/ந/ 1686 திரு. கந்தையா செல்லையா
36. யா/ந/ 1700 திரு. பொன்னர் செல்லையா
37. யா/ந/ 1705 திரு. கந்தையா செல்லத்துரை
38. யா/ந/ 1727 திரு. சின்னத்தம்பி தம்பிஐயா
39. யா/ந/ 1746 திரு. வேலுப்பிள்ளை அரியரத்தினம்
40. யா/ந/ 1847 திருமதி. அமிர்தம் துரையப்பா
41. யா/ந/ 1884 திரு. சின்னத்தம்பி காராளசிங்கம்
42. யா/ந/ 1955 திரு. கந்தையா வைத்திலிங்கம் நவரட்ணம்
43. யா/ந/ 1986 திருமதி. புனிதவதி கணேசலிங்கம்
44. யா/ந/ 1992 திரு. பொன்னையா இரத்தினம்
45. யா/ந/ 2036 திரு. தம்பி சிவராசா
46. யா/ந/ 2040 திரு. சின்னத்தம்பி சிவசம்பு
47. யா/ந/ 2191 திரு. நடராசா மகேஸ்வரன்
48. யா/ந/ 2227 திரு. முருகேசு நடராசா
49. யா/ந/ 2306 திரு. சுப்பையா வரதராஜேஸ்வரமுதலி
50. யா/ந/ 2373 திரு. பாவிலு தேவசகாயம்பிள்ளை
51. யா/ந/ 2385 திரு. முருகேசு விசுவலிங்கம்
52. யா/ந/ 2453 திரு.சண்முகானந்தம் சிறிவிவேகானந்தராசா
53. யா/ந/ 2456 திரு. கனகசபை சிவராமலிங்கம்
54. யா/ந/ 2561 திருமதி. அன்னலட்சுமி ஜெகநாதன்
55. யா/ந/ 2667 திரு. உலகநாதன் இராசசுப்பையா
56. யா/ந/ 2696 திரு. ஐயாத்துரை சின்னத்துரை
57. யா/ந/ 2735 திரு. குமாரசுவாமி சதாசிவம்
58. யா/ந/ 2829 திரு. சபாரத்தினம் அருளம்பலம்
59. யா/ந/ 2878 திருமதி. நவரத்தினம்மா முத்தையா
60. யா/ந/ 3159 திரு. பொன்னையா நடராசா
61. யா/ந/ 3252 திரு. பொன்னம்பலம் செல்வரத்தினம்
62. யா/ந/ 3258 திருமதி. சுரேந்தினி பாலகிருஷ்ணன்
63. யா/ந/ 3286 திரு. சுந்தரம் சுப்பிரமணியம்
64. யா/ந/ 3355 திரு. விசுவலிங்கம் திலகராயர்
65. யா/ந/ 3357 திரு. இரத்தினசபாபதி தவபாலன்
66. யா/ந/ 3388 திரு. வயித்தியநாதர் ஐயம்பிள்ளை அம்பலவாணர்
67. யா/ந/ 3409 திரு. மாணிக்கம் கந்தையா
68. யா/ந/ 3448 திருமதி. விக்கினேஸ்வரி தம்பித்துரை
69. யா/ந/ 3520 திருமதி. மனோன்மணி ஞானரட்ணம்
70. யா/ந/ 3532 செல்வன். கோபாலகிருஷ்ணபிள்ளை தவலிங்கம்
71. யா/ந/ 3625 திருமதி. செல்வராணி பொன்னுத்துரை
72. யா/ந/ 3693 திருமதி. அழகம்மா முருகையா
73. யா/ந/ 3716 திரு. நாகமுத்து இராசையா
74. யா/ந/ 3750 திரு. செல்லையா சுரேந்திரன் நர்ச்சினார்க்கினியன்
75. யா/ந/ 3777 திரு. செல்லத்தம்பி சீவரத்தினம்
76. யா/ந/ 3788 திரு. சின்னத்துரை கனகரத்தினம்
77. யா/ந/ 3810 செல்வி. ஜெகதீஸ்வரி அழகரெட்ணம்
78. யா/ந/ 3825 திரு. சபாபதிப்பிள்ளை பொன்னுத்துரை
79. யா/ந/ 3839 திரு. செல்லத்துரை இராசையா
80. யா/ந/ 3846 திரு. கந்தையா நல்லையா
81. யா/ந/ 3891 திரு. வேலுப்பிள்ளை பொன்னுத்துரை
82. யா/ந/ 3931 திரு. செல்லையா கனகரத்தினம்
83. யா/ந/ 3966 திரு. இராமசுவாமி ராஜேஸ்வரன்
84. யா/ந/ 3976 திரு.. சதாசிவம் சிவனடியார்
85. யா/ந/ 3992 திரு. சரவணமுத்து சுப்பிரமணியம்
86. யா/ந/ 4058 திரு. தம்பிப்பிள்ளை கனகரத்தினம்
87. யா/ந/ 4124 திரு. வைரமுத்து முதலித்தம்பி
88. யா/ந/ 4160 திரு. துரையப்பா சிவராசா
89. யா/ந/ 4161 திரு. நாகமுத்து சபாரெத்தினம்
90. யா/ந/ 4191 திருமதி. அன்னப்பிள்ளை சுந்தரம்பிள்ளை
91. யா/ந/ 4247 திரு. வேலாயுதர் தம்பிஐயா
92. யா/ந/ 4284 திரு. நாகமணி சிவராமன்
93. யா/ந/ 4326 திரு. கனகரத்தினம் இராசேந்திரா
94. யா/ந/ 4349 திருமதி. தங்கம்மா பொன்னுத்துரை
95. யா/ந/ 4372 திருமதி. சித்திரா திருக்கமலநாதன்
96. யா/ந/ 4383 திருமதி. வசந்தாதேவி மனோகரன்
97. யா/ந/ 4393 திரு. சின்னப்பு வல்லிபுரம்
98. யா/ந/ 4417 திரு. நடராசா மயில்வாகனம்
99. யா/ந/ 4439 திருமதி. அன்னசோதி சோமசுந்தரம்
100. யா/ந/ 4467 திரு. பாலசற்குணம் குணபாலன்
101. யா/ந/ 4478திருமதி. நித்தியானந்தபூபதி சண்முகலிங்கம்
102. யா/ந/ 4514 திரு. நாகலிங்கம் பாலகுமாரன்
103. யா/ந/ 4544 திரு. அம்பலவாணர் மயில்வாகனம்
104. யா/ந/ 4684 திரு.சிவசிதம்பரம்பிள்ளை சதாசிவம்பிள்ளை
105. யா/ந/ 4693 திருமதி. திலகவதி இராசரத்தினம்
106. யா/ந/ 4718 திரு. ஐயாம்பிள்ளை ஆறுமுகம் கந்தையா
107. யா/ந/ 4719 திரு. செல்லத்துரை கனகரெத்தினம்
108. யா/ந/ 4765 திரு. சபாபதி வேலாயுதபிள்ளை
109. யா/ந/ 4766 திருமதி. தங்கம்மா சோமசுந்தரம்
110. யா/ந/ 4770 திரு. என்றிஜெகோவரட்னம் உலகசேகரம்
111. யா/ந/ 4830 திரு. முத்துக்குமாரு இரத்தினசிங்கம்
112. யா/ந/ 4894 திருமதி. கனகரஞ்சிதம் வைத்திலிங்கம்
113. யா/ந/ 4911 திரு. சுப்பையா அழகரத்தினம்
114. யா/ந/ 4916 திரு. செல்லப்பா சின்னத்தம்பி
115. யா/ந/ 5018 திரு. சதாசிவம் சிவதாசன்
116. யா/ந/ 5092 திரு. சரவணமுத்து தனபாலசிங்கம்
117. யா/ந/ 5106 திரு. கந்தையா செல்வத்துரை
118. யா/ந/ 5109 திரு. அப்பாத்துரை கைலாயபிள்ளை
119. யா/ந/ 5165 திரு. இரத்தினசிங்கம் துரைவீரசிங்கம்
120. யா/ந/ 5193 திரு. வேலுப்பிள்ளை இரத்தினசபாபதி
121. யா/ந/ 5236 திரு. கதிரவேலு செல்வரத்தினம்
122. யா/ந/ 5295 திரு. அப்பையா கந்தையா
123. யா/ந/ 5304 திரு. வயிரமுத்து சின்னத்துரை
124. யா/ந/ 5325 திரு. சின்னத்துரை திருவிளங்கம்
125. யா/ந/ 5328 திரு. பொன்னையா குமாரசாமி
126. யா/ந/ 5352 செல்வி. சுதா குமாரசாமி
127. யா/ந/ 5378 திருமதி. சிவபாக்கியம் இராசதுரை
128. யா/ந/ 5387 திருமதி. நாகம்மா தில்லையம்பலம்
129. யா/ந/ 5389 திரு. கதிர்காமு கணபதிப்பிள்ளை
130. யா/ந/ 5425 திரு. சிவஞானம் சிவக்கொழுந்து
131. யா/ந/ 5472 திரு. இராசா குமாரசாமி
132. யா/ந/ 5520திருமதி. லீலாலோகேஸ்வரி குமாரகுலசிங்கம்
133. யா/ந/ 5533 திரு. கதிர்காமர் சுப்பிரமணியம்
134. யா/ந/ 5537 திரு. சபாபதி மார்க்கண்டு
135. யா/ந/ 5541 திரு. சுப்பையா ஆறுமுகம்
136. யா/ந/ 5557 திருமதி. நவரத்தினம்மா சிவஞானம்
137. யா/ந/ 5743 திரு. சின்னத்தம்பி திருவிளங்கம்
138. யா/ந/ 5762 திரு. கனகசபை சின்னத்துரை
139. யா/ந/ 5773 திரு. அப்பாப்பிள்ளை சபாரத்தினம்
140. யா/ந/ 5788 திரு. கந்தையா இராசையா
141. யா/ந/ 5817 திரு. ஆசீர்வாதம் லூத்தையா
142. யா/ந/ 5871 செல்வி. சூரியகுமாரி கந்தையா
143. யா/ந/ 5911 திரு. கந்தையா அசோகன்
144. யா/ந/ 5922 திரு. சண்முகம் சோமசுந்தரம்
145. யா/ந/ 5937 திருமதி. இந்திராதேவி பாலசிங்கம்
146. யா/ந/ 5966 திரு. சரவணமுத்து நல்லையா
147. யா/ந/ 6030 திரு. சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை
148. யா/ந/ 6075 திருமதி. நல்லம்மா முருகேசு
149. யா/ந/ 6233 திருமதி. செல்லம்மா அருணாசலம்
150. யா/ந/ 6239 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
151. யா/ந/ 6241 திரு. சின்னப்பு தம்பிராசா
152. யா/ந/ 6278 திரு. நன்னி சிங்கராசா
153. யா/ந/ 6300 திரு. சின்னப்பொடி செல்லையா
154. யா/ந/ 6315 திருமதி. இராசமணி இராசையா
155. யா/ந/ 6321 திரு. தம்பு கனகசபை
156. யா/ந/ 6332 திரு. பொன்னுத்துரை சோமசுந்தரம்
157. யா/ந/ 6451 திருமதி. இரத்தினம் குமாரசாமி
158. யா/ந/ 6472 திரு. கணபதிப்பிள்ளை இளையதம்பி
159. யா/ந/ 6481 திரு. வேலாயுதம் சரவணமுத்து
160. யா/ந/ 6484 திரு. நடராசா ஸ்ரீசோமசேகரம்
161. யா/ந/ 6512 திருமதி. சறோஜினிதேவி மரியதாஸ்
162. யா/ந/ 6515 திருமதி. பாலநாகம்மா குமாரசாமி
163. யா/ந/ 6519 திருமதி. பூரணம் பொன்னம்பலம்
164. யா/ந/ 6530 செல்வி. றெனி மனுவல்ப்பிள்ளை
165. யா/ந/ 6549 திரு. சின்னத்தம்பி ரகுலேந்திரன்
166. யா/ந/ 6554 திருமதி. சறோஜினிதேவி குகேஸ்வரராஜா
167. யா/ந/ 6686 திருமதி. தர்மலதா சத்தியானந்தன்
168. யா/ந/ 6744 திரு. சின்னையா சந்திரசேகரம்
169. யா/ந/ 6747 திரு. இரத்தினசிங்கம் சேனாதிராசா
170. யா/ந/ 6806 திருமதி. ஈஸ்வரி சிவகுரு
171. யா/ந/ 6816 திரு. செல்லத்துரை பாலச்சந்திரன்
172. யா/ந/ 6879 திருமதி. சியாமளேஸ்வரி ஜெகநாதக்குருக்கள்
173. யா/ந/ 6880 திருமதி. பேள்செல்வமணி தம்பியப்பா
174. யா/ந/ 6919 திரு. பொன்னம்பலம் அமரசிங்கம்
175. யா/ந/ 6920 திரு. வைரவி டானியல்
176. யா/ந/ 6922 திரு. ஆழ்வாப்பிள்ளை சண்முகம்
177. யா/ந/ 6979 திருமதி. செல்வராணி கிருஷ்ணபிள்ளை
178. யா/ந/ 6988 திருமதி. முத்தம்மா இராமசாமி
179. யா/ந/ 7082 திரு. கோவிந்தபிள்ளை கந்தையா
180. யா/ந/ 7089 திருமதி. சாந்தி வரவேஸ்வரன்
181. யா/ந/ 7105 திரு. பிறெற்றிக் நோயல் ஏபிரகாம்
182. யா/ந/ 7129 திருமதி. இராசம்மா செல்லத்துரை
183. யா/ந/ 7134 திரு. ஜோன்பிள்ளை இரவீந்திரகுமார்
184. யா/ந/ 7155 திருமதி. சுகிர்தரத்தினம் கந்தையா
185. யா/ந/ 7168 திரு. வல்லிபுரம் சத்துருசிங்கம்
186. யா/ந/ 7180 திரு. தம்பிப்பிள்ளை ஆறுமுகம்
187. யா/ந/ 7204 திரு. சுந்தரராஜா பாலசுப்பிரமணியம்
188. யா/ந/ 7210 திரு. கிருஷ்ணர் குமாரசாமி
189. யா/ந/ 7218 திருமதி. இரத்தினம் ஆறுமுகம்
190. யா/ந/ 7269 திரு. சின்னப்பு சூசைப்பிள்ளை
191. யா/ந/ 7272 திரு. சவரிமுத்து ஜேம்ஸ்
192. யா/ந/ 7308 திரு. ஆதர்கணேசபிள்ளை ஜோசப்
193. யா/ந/ 7319 திரு. செல்லத்துரை பஞ்சாட்சரம்
194. யா/ந/ 7360 திருமதி. சுமதி தெய்வேந்திரன்
195. யா/ந/ 7367 செல்வி. சுகந்தி தியாகராஜா
196. யா/ந/ 7520 திரு. சுவாம்பிள்ளை மார்க்கண்டு
197. யா/ந/ 7528 திரு. காசிப்பிள்ளை சத்தியதீசன்
198. யா/ந/ 7581 திரு. நாகலிங்கம் கந்தசாமி
199. யா/ந/ 7585 திரு. ஆறுமுகம் அருளானந்தம்
200. யா/ந/ 7607 திருமதி. பூரணம் செல்லப்பா
201. யா/ந/ 7626 திரு. இரத்தினம் குமாரதாஸ்
202. யா/ந/ 7634 திருமதி. பூபதி சிற்றம்பலம்
203. யா/ந/ 7660 திருமதி. அருளம்மா கந்தசாமி
204. யா/ந/ 7668 திரு. கந்தையா சண்முகராசா
205. யா/ந/ 7672 திரு. இரத்தினம் சிவநாதன்
206. யா/ந/ 7737 திரு. வைரவநாதன் கந்தசாமி
207. யா/ந/ 7852 திரு. வில்வரசரட்ணம் சுப்பையாஸ்ரீபன்
208. யா/ந/ 7853 திருமதி. மேரி கனகசுந்தரம்
209. யா/ந/ 7863 திரு. செல்லப்பா கனகரட்ணம்
210. யா/ந/ 7873 திருமதி. தங்கலட்சுமி இராசையா
211. யா/ந/ 7904 திரு. நாகமணி நடராசா
212. யா/ந/ 7932 திருமதி. பரமேஸ்வரி தம்பிப்பிள்ளை
213. யா/ந/ 8017 திரு. செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
214. யா/ந/ 8022 திருமதி. சிவபாக்கியவல்லி நடரா்ஜா
215. யா/ந/ 8030 திருமதி. பாறுபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை
216. யா/ந/ 8055 திருமதி. கனகம்மா அரசரத்தினம்
217. யா/ந/ 8081 திருமதி. செல்லம்மா சோமசுந்தரம்
218. யா/ந/ 8128 திரு. லோறன்ஸ்பிலிப் அலோசியஸ்
219. யா/ந/ 8199 திரு. செல்லப்பா தில்லையம்பலம்
220. யா/ந/ 8211 திருமதி. சிவகாமிப்பிள்ளை வைரவநாதன்
221. யா/ந/ 8214 திருமதி. செல்லம்மா கந்தையா
222. யா/ந/ 8240 திரு. சின்னத்தம்பி நவரெத்தினம்
223. யா/ந/ 8251 திரு. சுப்பிரமணியம் முருகேசு
224. யா/ந/ 8275 திரு. சபாரத்தினம் தியாகராஜா
225. யா/ந/ 8336 திரு. பொன்னையா விநாயகமூர்த்தி
226. யா/ந/ 8359 திரு. சின்னர் சுப்பிரமணியம்
227. யா/ந/ 8377 திரு. கனகசபை ஜெகநாதன்
228. யா/ந/ 8381 திருமதி. நாகரெத்தினம் மயில்வாகனம்
229. யா/ந/ 8395 திருமதி. பூமணி இராசேந்திரம்
230. யா/ந/ 8415 திரு. கந்தர் சின்னத்தம்பி
231. யா/ந/ 8495 திரு. சுப்பிரமணியம் சண்முகராசா
232. யா/ந/ 8520 திருமதி. தவமணி கதிரவேல்
233. யா/ந/ 8542 திரு. சின்னப்பு கந்தையா
234. யா/ந/ 8555 திருமதி. இராசம்மா சின்னத்துரை
235. யா/ந/ 8606 திருமதி. இராசலட்சுமி பத்மநாதன்
236. யா/ந/ 8633 திருமதி. கமலாம்பிகை பரமநாதன்
237. யா/ந/ 8640 திருமதி. செல்வமணி சுப்பிரமணியம்
238. யா/ந/ 8680 திருமதி. வரதலட்சுமி சோமசூரியசிங்கம்
239. யா/ந/ 8739 திரு. நாகமணி கார்த்திகேசு
240. யா/ந/ 8748 திருமதி. பாக்கியம் மதியாபரணம்
241. யா/ந/ 8781 திருமதி. ராஜேஸ்வரி சுந்தரலிங்கம்
242. யா/ந/ 8783 திருமதி. தெய்வானைப்பிள்ளை நடேசு
243. யா/ந/ 8798 திரு. சரவணமுத்து செல்லத்துரை
244. யா/ந/ 8830 திரு. சின்னப்பொடி அப்புக்குட்டி
245. யா/ந/ 8925 திருமதி. நல்லம்மா நடராஜா
246. யா/ந/ 8951 திரு. வைரமுத்து நாகலிங்கம்
247. யா/ந/ 8971 திருமதி. தங்கம்மா சபாபதி இராசா
248. யா/ந/ 8984 திரு. வயிரமுத்து தருமலிங்கம்
249. யா/ந/ 8996 திருமதி. தங்கம்மா செல்லையா
250. யா/ந/ 9025 திருமதி. கனகாம்பிகை முருகையா
251. யா/ந/ 9033 திருமதி. பத்மாதேவி கோபாலகிருஷ்ணன்
252. யா/ந/ 9095 திருமதி. ஈஸ்வரி நடராஜா
253. யா/ந/ 9115 திரு. முத்து நடேசு
254. யா/ந/ 9184 திருமதி. ஜெயராணி தங்கராஜா
255. யா/ந/ 9205 திருமதி. சிகாமணி சுப்பையா
256. யா/ந/ 9230 திருமதி. இராசம்மா சதாசிவம்
257. யா/ந/ 9284 திருமதி. அன்னம் நடராஜா
258. யா/ந/ 9285 திரு. சபாபதி தனபாலசிங்கம்
259. யா/ந/ 9290 திரு. இராசையா சின்னராசா
260. யா/ந/ 9300 திரு. வல்லிபுரம் பரமலிங்கம்
261. யா/ந/ 9313 திரு. வேலுப்பிள்ளை தம்பு
262. யா/ந/ 9315 செல்வி. மகேஸ்வரி தம்பிமுத்து
263. யா/ந/ 9320 திருமதி. ஈஸ்வரி சபாரட்ணம்
264. யா/ந/ 9330 திருமதி. விஜயகுமாரி இரட்ணநாதன்
265. யா/ந/ 9362 திருமதி. தெய்வானைபிள்ளை கோவிந்தபிள்ளை
266. யா/ந/ 9398 திரு. கந்தர் பொன்னையா
267. யா/ந/ 9445 திரு. பஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளை
268. யா/ந/ 9477 திரு. கந்தையா கதிரவேலு
269. யா/ந/ 9506 திரு. கோவிந்தர் பொன்னுத்துரை
270. யா/ந/ 9518 திரு. செல்லத்துரை செல்லையா
271. யா/ந/ 9532 திரு. கந்தையா அரியகுட்டி
272. யா/ந/ 9537 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
273. யா/ந/ 9583 திரு. கந்தசாமி புஸ்பராசா
274. யா/ந/ 9620 திரு. செல்லையா இராசதுரை
275. யா/ந/ 9657 திருமதி. இராசம்மா வேலுப்பிள்ளை
276. யா/ந/ 9663 திரு. நாகமுத்து கணபதிப்பிள்ளை
277. யா/ந/ 9679 திரு. சிதம்பரப்பிள்ளை செல்லையா
278. யா/ந/ 9701 திருமதி. செல்லம் சிவசுப்பிரமணியம்
279. யா/ந/ 9703 திரு. தாமோதரம்பிள்ளை மயில்வாகனம்
280. யா/ந/ 9718 திருமதி. சின்னத்தங்கச்சி துரைச்சாமி
281. யா/ந/ 9719 திரு. சரவணமுத்து நடராசா
282. யா/ந/ 9724 திரு. ஆறுப்பிள்ளை சின்னத்துரை
283. யா/ந/ 9801 திரு. வல்லிபுரம் கந்தையா
284. யா/ந/ 9807 திருமதி. இராசமலர் நவரத்தினம்
285. யா/ந/ 9811 திருமதி. புவனேஸ்வரி கனகசபாபதி
286. யா/ந/ 9824 திருமதி. நல்லம்மா செல்லையா
287. யா/ந/ 9842 திருமதி. சரஸ்வதி பேரின்பநாயகம்
288. யா/ந/ 9877 திருமதி. நாகம்மா வேலாயுதபிள்ளை
289. யா/ந/ 9884 திரு. கந்தையா சின்னராசா
290. யா/ந/ 9922 திருமதி. சரஸ்வதி நாகலிங்கம்
291. யா/ந/ 9927 திரு. சிதம்பரநாதன் சிவநாதன்
292. யா/ந/ 9940 திரு. இராமுப்பிள்ளை பொன்னையா
293. யா/ந/ 10039 திரு. சபாபதி தம்பித்துரை
294. யா/ந/ 10048 திருமதி. வள்ளியம்மா நாகலிங்கம்
295. யா/ந/ 10078 திருமதி. அன்னலெட்சுமி நாகராசா
296. யா/ந/ 10092 செல்வி. லீலாவதி சுப்பிரமணியம்
297. யா/ந/ 10094 செல்வி. வசந்தகுமாரி சண்முகராசா
298. யா/ந/ 10105 திருமதி. மகேஸ்வரி விசுவலிங்கம்
299. யா/ந/ 10134 திரு. நாகலிங்கம் சிவபாலமூர்த்தி
300. யா/ந/ 10155 திரு. நீக்கிலாப்பிள்ளை பொன்னையா
301. யா/ந/ 10192 திரு. மயில்வாகனம் சுப்பையா
302. யா/ந/ 10219 திரு. சபாபதி செல்லப்பா
303. யா/ந/ 10320 திரு. தம்பு சபாரத்தினம்
304. யா/ந/ 10373 திருமதி. சிவபாக்கியம் வேலுப்பிள்ளை
305. யா/ந/ 10405 திரு. மார்க்கண்டு சின்னத்தம்பி
306. யா/ந/ 10420 திரு. சின்னையா தம்பிமுத்து
307. யா/ந/ 10429 திரு. இளையதம்பி வைத்திலிங்கம்
308. யா/ந/ 10432 திரு. அம்பலவாணர் இரட்ணசபாபதி ஆறுமுகம்
309. யா/ந/ 10435 திரும்தி. சவுந்தரவல்லி சோமசுந்தரம்
310. யா/ந/ 10439 திரு. தம்பிமுத்து சச்சிதானந்தம்
311. யா/ந/ 10461 திருமதி. நாகரத்தினம் செல்லையா
312. யா/ந/ 10490 திரு. இராமசாமி தவேந்திரன்
313. யா/ந/ 10514 திரு. இளையவர் ஆசைப்பிள்ளை
314. யா/ந/ 10515 செல்வி. ராஜி நாகேந்திரா
315. யா/ந/ 10520 திருமதி. தையல் அம்மை வேலாயுதம்
316. யா/ந/ 10531 திரு. நாகலிங்கம் கந்தையா
317. யா/ந/ 10547 திரு. வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

(மிகுதி நாளை தொடரும்)

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# கட்சிகளாக பிரிந்துசெயற்படும் வரை இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது !

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு - அனைவரும் கட்சி அரசியலை மறந்து ஒன்றுபட்டு செயற்பட முன்வரவேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

வலஸ்முல்லைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசியல் கட்சிகளாகப் பிரிந்து செயற்படும்வரை இந்த தேசியப் பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாமல் நீண்டுகொண்டே செல்லும்.

இந்தநிலை நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்யும் எதிர்கால நடவடிக்கைகளுக்கு பெரும் தடையாக அமையும்.

நாட்டிலுள்ள சகல இனத்தவர்களும் சுதந்திரமாக வாழ்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஹெய்ட்டிக்குச் செல்வதற்கு இலங்கை படையினர் தயார்

(கொழும்பு)

ஹெய்ட்டியில் அமைதிகாப்புப் பணியில் ஈடுபடுவதற்காக - விரைவில் இலங்கையில் இருந்து இராணுவ அணியொன்று செல்லவுள்ளது.

இலங்கையின் முதலாவது சர்வதேச அமைதி காக்கும் படையணி ஹெய்ட்டி செல்வதற்கு ஆயத்தமாகி வருகிறது.

கேணல் அமல் குணசேகர தலைமையில் 750 பேர் கொண்ட இராணுவ பற்றாலியனே ஹெய்ட்டிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

ஹெய்ட்டியில் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடவுள்ள 6700 பேர் அடங்கிய ஐக்கிய நாடுகள் அமைதிப் பணியில் இலங்கை இராணுவம் முக்கிய பங்கை வகிக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஹோட்டலில் குண்டுவெடிப்பு தம்பதிகள் உயிரிழப்பு!

(கொழும்பு)

மாவனெல்ல அரநாயக்க் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் உயிரிழந்தனர்.

அரநாயக்க பகுதியில் உள்ள ஹோட்டல் அறையொன்றில் நேற்றுக் காலை இந்த குண்டுவெடிப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் அறையிலிருந்த தம்பதியினரே உயிரிழந்தனர். இந்தக் குண்டுவெடிப்பு எவ்வாறு இடம்பெற்றது என்பது குறித்து இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழீழ மீட்புநிதி...

செலுத்தியிருப்பின் இருவரும் வருகை தர வேண்டும்.

3) கடன் சான்றிதலாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களை பின்னுரித்தாளர் கொண்டுவர வேண்டும்.

I) இறப்புச் சான்றிதழ்

II) இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)

III) கடன் சான்றிதழ்.

IV) பின்னுரித்தாளரின் ஆவணம்'

V) பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளரின் கடிதம்.

4) கடன் சான்றிதழிலுள்ள முழுப் பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப் பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

5) அ) மீளளிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதலாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப் பெற முடியும்.

ஆ) அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5X2.0 அங்குல அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின்...

ளப்பட்டுவருகிறது. எனினும், இந்தப் பாதுகாப்புக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களைத் தடுக்கமுடியாதுள்ளது. இதற்கு போர் நிறுத்த உடன்பாடே காரணமாகும்.

அத்துடன், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகங்களுக்கும் கூடுதலான பாதுகாப்பை வழங்க படைத்தரப்பு முடிவெடுத்திருப்பதாகவும் கேணல் சுமேத பெரேரா மேலும் தெரிவித்தார்.


## நமது ஈழநாடு விளம்பரக் கட்டணங்கள்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூபா 10,000 | ரூபா 22,000 |
| அரைப்பக்கம் | ரூபா 5,000 | ரூபா 12,000 |
| கொலம் செ.மீ Colum cm | ரூபா 50 | ரூபா 120 |

## மரண அறிவித்தல்

7cm x 2 கொலம் (colum) அளவுடைய மரண அறிவித்தல் விளம்பரங்கள் இலவசமாகவே பிரசுரிக்க ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு மேற்பட்ட அளவுக்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.


# வெளிநாட்டு உதவிகள் தடைப்பட்டால் மோசமான வறுமைக்குள் சிக்குவோம் !

## ஐ.தே.க. எம்பி லக்ஷ்மன் யாப்ப எச்சரிக்கை

நாட்டிற்கு கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் தடைப்படுமானால் இலங்கையில் பாரிய பெருளாதார நெருக்கடி ஏற்படுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தனா தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் பொது மக்களுக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்திருப்பதாவது-

இன்று இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெறாத நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக அமெரிக்கா உட்பட 34 நாடுகள் உறுதியளித்த 45 ஆயிரம் கோடி ரூபாவை எமக்கு வழங்காதிருக்கத் தீமானித்துள்ளன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் அரசு ஆரம்பிக்காது விட்டால் இந்த நிதி தொடர்ந்தும் எமக்குக் கிடைக்காதுபோய்விடும்.

இந்த உதவி கிடைக்கப்பெறாது போனால் பெரும் நெருக்கடிக்குள் இலங்கை தள்ளப்பட நேரிட்டு மக்கள் பெரும் ஆபத்திற்குள் தள்ளப்பட்டு வறுமையை அனுபவிக்க நேரிடும்.

தற்போது பொருட்களின் விலை அதிகரித்துச் செல்கின்றமையும் இலங்கையின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.தே.க.வின் வருடாந்த மாநாடு

ஐக்கிய தேசியக் கட்சியின் 58 ஆவது வருடாந்த மாநாடு இன்று ஸ்ரீகோத்தவில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில், ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு!

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் வீட்டுப் பாவனைக்கான ஷெல் காஸ் சிலிண்டரின் விலை 99 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பின்படி கொழும்புப் பகுதியில் மீள்நிரப்பப்பட்ட 12.5 கிலோகிராம் எடை கொண்ட வீட்டுப் பாவனைக்கான காஸ் சிலிண்டரின் விலை 789 ரூபாவாக இருக்கும்.

கொழும்பைச் சூழவுள்ள பகுதிகளில் 690 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சிலிண்டர் ஒன்றின் விலை 14.35 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் ஏற்பட்ட எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாகவே இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக ஷெல் காஸ் நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்னொரு...

இரண்டு ட்ரோலர் மீன்பிடிப் படகுகளில் இந்த ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், அந்த ட்ரோலர்களைச் சூழ பெருமளவு சிறிய படகுகளும் வந்த விபரத்தினை படையினர் பெற்றுள்ளனர்.

இவ்வாறு வந்த ஆயுதங்கள் சம்பூர் கடற்பகுதியில் வைத்து இறககப்பட்டு, திருகோணமலை சம்பூரிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆயுதங்கள் இறக்கப்பட்டது கடந்த மாதம் 30 ஆம் திகதி இரவு எனவும் அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்தது.

## வேலைவாய்ப்புப்...

மேலும் 24 ஆயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும். இவர்களுக்கு பயிற்சிகள் முடிந்ததும் நிரந்தர அரச வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இந்தத் திட்டம் குறித்து எதிர்க் கட்சியினர் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றது.

அரசாங்கசேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனேயே பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்குத் தெரிவு செய்யப்பட்டனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மீண்டும்..

அண்மையில் தார், டீசல் விலை 3.50ஆல் அதிகரித்திருந்தது. இதனால் அரச மற்றும் தனியார் துறை பஸ்களின் கட்டணங்களை அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

# நிதியுதவியை நிறுத்தப்போவதாக ஜப்பான் அரசாங்கம் எச்சரிக்கை!

இலங்கை அரசாங்கத்துக்கு வழங்குவதற்கு உறுதியளித்த கடன உதவிகள் அனைத்தையும் நிறுத்தப் போவதாக ஜப்பான் எச்சரித்துள்ளது.

இலங்கையில் தேசிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கென ஜப்பானிய அரசாங்கம் வழங்கிய நிதியுதவியை இலங்கை அரசாங்கம் உரிய முறையில் இதுவரை பயன்படுத்தப்படவில்லையெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேல் கொத்மலைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக 33 ஆயிரம் மில்லியன் ரூபாவை கடனாக ஜப்பான் அரசாங்கம் வழங்கியது. ஆனால், இலங்கை அரசாங்கம் மேல் கொத்மலைத் திட்டத்தை இதுவரை ஆரம்பிக்கவில்லை.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் ஜப்பானிய அரசாங்கம் அதிருப்பதி அடைந்துள்ளதாகவும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படாவிட்டல், இலங்கைக்கு உறுதியளிக்கப்பட்ட ஏனைய கடன் உதவிகளையும் நிறுத்தப்போவதாக ஜப்பான் எச்சரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## இ.தொ.காவின்...

வளிக்க முன்வந்துள்ளார்கள். நேரிய, சீரான வழியில் அரசியல் நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுப்பார்களா என்ற கேள்வி இன்று தமிழ் மக்கள் மத்தியில் பாரிய சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

எந்த அடிப்படையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதென்பது எமக்கும் புரியாத புதிராக உள்ளது. இனி வருங்காலங்களில் இதிலுள்ள நியாயத்தை நாம் அவதானிக்கலாம் எனக் கருதுகின்றேன்.

தமிழ்மக்களுக்கான சுதந்திரமான வாழ்வை தமிழீழ விடுதலைப் புலிகள் எந்தளவுக்கு வலியுறுத்துகின்றார்கள். அதற்காகப் பாடுபடுகின்றார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

அதற்கு தமிழ் அரசியல்வாதிகள் பலம் சேர்த்து நிற்பது அவசியமானது. அதனை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டுமென அவர் மேலும் வலியுறுத்தினார்.

## பிரதமர் திறந்த...

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நினைவுக்கல் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டு, அடிக்கல்லும் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்வை தான் நாடு திரும்பும் வரை ஒத்திவைக்குமாறு லண்டனில் தங்கியிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரியிருந்தபோதும் -

அவரது வேண்டுகோள் புறக்கணிக்கப்பட்டு, அடிக்கல் நாட்டு வைபவம் இடம்பெற்றது.

இதேவேளை, திரைநீக்கம் செய்து வைத்த நினைவுக்கல்லில் பித்தளை தகடொன்றில் சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டன. அதில் பிரதமரின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை. இதனால் பிரதமர் மஹிந்த ரா[illegible]பக்ஷ அதிருப்தி அடைந்ததாக[illegible] தெரிவிக்கப்படுகிறது.

இந்த நினைவுக்கல் காணாமற் போனதற்கு பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பு...

களப்பிற்கும் இடையே இடம்பெறும் படகுச்சேவையும் இடம்பெறவில்லை. அத்துடன் வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள் ஆகியவற்றில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் நேற்றைய தினம் விஷேட பூசைகள் இடம்பெற்றன.

அம்பாறையின் கல்முனை நகரில் தமிழ், முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் நேற்றுமுழுநாளும் மூடப்பட்டிருந்தன. அத்துடன், போக்குவரத்துக்களும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

கடந்த 1990 ஆம் ஆண்டு வந்தாறுமூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தினுள் இருந்த அகதிகள் முகாம் மீது படையினர் நடத்திய தாக்குதலில் 150 இற்கும் மேற்பட்ட தமிழர் கொல்லப்பட்ட 14 ஆம் ஆண்டு நினைவு தினத்தை பூரண துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை மூலம் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எதிர்காலத்தை...

டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க சமஷ்டி முறைக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

1930 ஆம் ஆண்டிலும் மத்திய மாகாணத்துக்கு சமஷ்டிமுறை ஆட்சி கோரப்பட்டது. அதேநேரம் சமஷ்டி கட்சியும் பிரித்தானியாவுக்குச் சென்று சமஷ்டி முறை தொடர்பாகத் தீர்க்கமாக ஆராய்ந்திருந்தது.

1950 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தமானது வடக்கு - கிழக்குக்கு குறிப்பிடத்தக்க அதிகாரப் பகிர்வை வழங்கும் வகையில் அமைந்திருந்தது.

இதனை எதிர்த்தே அன்று ஐக்கிய தேசியக் கட்சி பேரணியினை நடத்தியது. அந்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், நாட்டில் உள்நாட்டு யுத்தமொன்றினைத் தவிர்த்திருக்கலாம்.

இந்த நிலையிலேயே, 1995, 97, 2000 ஆம் ஆண்டுகளில் யோசனைகள் தென்னிலங்கைத் தரப்பால் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் வளர்ச்சிக் கட்டமாகவே ஐக்கிய தேசியக் கட்சி ஒஸ்லோவில் சமஷ்டி முறையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தது எனவும் குமார் ரூபசிங்க தெரிவித்தார்.

**தேசிய லொத்தர் சபை — மஹஜன சம்பத பெறுபேறுகள்**

சீட்டிழுப்பு இல:- 1643 திகதி:- 03.09.2004

வெற்றி இலக்கங்கள்

N 0 2 4 4 7 8

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வட்டக்கச்சி

## ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் தேர்த்திருவிழா சிறப்பிதழ்





## வட்டக்கச்சியில் கோயில் கொண்ட ஸ்ரீரங்கநாதப் பெருமாள்

இலங்கையிலே பலபாகங்களிலுமுள்ள விஷ்ணு ஆலயங்களில் ஒன்று கிளிநொச்சி வட்டக்கச்சியிலே அமைந்துள்ளது. சிறு ஆலயமாகவிருந்த ஆலயம், அவ்வூர் மக்களின் பெரு முயற்சியாலும் பரந்தாமனின் பெருங் கருணையினாலும் இன்று சிறப்புமிக்க ஆலயமாகத் திகழ்கின்றது. சிறப்பான முறையிலே பூசை வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

சமய, சமூகப் பணிகளை மேற்கொண்டுவருவது இவ் ஆலயத்தின் சிறப்பு அம்சமாகும். பல ஆண்டுகளாக அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களுக்கு சமய நெறிகள் போதிக்கப்பட்டு வருகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இவ்வாலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஏகாதசி, வைகுந்த ஏகாதசி, திருப்பாவை, திருவிளக்குப் பூசை, ஸ்ரீ ராம நவமி, ஸ்ரீராம பட்டாபிஷேகம், ஸ்ரீ ஆஞ்ஞனேயர் ஜயந்தி ஆழ்வார்கள் குருபூசை ஆகிய விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

பல பாகங்களிலிருந்து வரும் அடியார்கள் பரந்தாமனைக் காண்பதற்காக வருகை தந்த வண்ணம் உள்ளனர். மம்மில் தீர்த்தத்திலே நீராடி, தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்கிறார்கள். கிழக்கு நோக்கிய மூலஸ்தானத்திலே அரங்கநாதர், ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராய் நின்ற கோலத்திலே காட்சியளிக்கிறார். தெற்கு நோக்கிய அரங்கத்திலே பெருமாள் ஸ்ரீலஷ்மி தேவியுடன் அனந்த சயனத்திலே வீற்றிருக்கின்றார். பார்ப்பதற்கே அழகைக் கொடுக்கும் இவ்விக்கிரகம் உள்ளூர் கலைஞராலேயே வடிவமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வசந்த மண்டபத்திலே வீற்றிருந்து அருங்காட்சி கொடுத்தவண்ணம் அரங்கநாதப் பெருமாள் ஸ்ரீ லஷ்மி சமேதராக வீற்றிருக்கும் காட்சி உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் காட்சியாக அமைந்துள்ளது. பகவானுடைய நாமம் எல்லோருடைய திருவாய்களிலேயும் ஓதப்படவேண்டும். பகவத்கீதை பாராயணம் பண்ணவேண்டும் என்பதே இவ் ஆலயத்தின் குறிக்கோளாகும்.

பகவானை இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவிலே வழிபட்டு இஷ்ட சித்திகளையும் பெறும் வண்ணம் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

## ஆசியுரை

விழாக்கால பிரதமகுரு சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானம். பிரதானகுரு பிரம்ம ஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் ஸ்ரீகாந்தக் குருக்கள் அவர்கள்.

கிளிநொச்சி மாவட்டத்திலே வட்டக்கச்சி என்னும் புண்ணிய பூமியிலே சித்தாமிர்த தீர்த்தக் கரையிலே (மம்மில் குளக்கரையிலே) ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் கொண்டு அருள்பாலித்தவண்ணம் வீற்றிருக்கிறார்கள். பகவானுடைய திருநாமத்தை பக்தர்கள் நாள்தோறும் ஒலித்த வண்ணமிருக்கின்றார்கள். பகவத்கீதை படித்த வண்ணம் இருக்கின்றார்கள். அதனால் இப்பூமி புனித பூமியாக காட்சியளித்த வண்ணம் இருக்கிறது.

பகவானிடம் பக்தர்களின் பக்தி வெள்ளத்தின் பெருக்கைக் காணக் கூடியதாகவுள்ளது. 06.09.2004 திங்கட்கிழமை திருத்தேரிலே பகவானின் காட்சியை பெருந்திரளான மக்கள் கண்டுகளிக்கவுள்ளார்கள்.

அன்றைய தினத்திலே எம்பெருமானுடைய கிருபா கடாச்சம் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்றும், மக்கள் எல்லோரும் நிரந்தர சமாதானத்துடனும், அமைதியாகவும் வாழவேண்டும் என்று வேண்டுகின்றேன்.

சுபம்.


### விளம்பர அனுசரணை:

தேரேறிவரும் பகவானே வினைபோக்கி அருளளிப்பாய்...

மக்கள் மனம் விரும்பும் ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வகைகளுக்கும், அழகு சாதனப் பொருட்களுக்கும் சிறந்த இடம்

தமிழரசு புடவை, அழகு வாணிபம்

(சீலன்)
சந்தையடி, வட்டக்கச்சி.
(சி-2819)

அதர்மத்துக்கு ஆரம்பம்தான் வெற்றி தர்மம் நின்று நிதானித்தே வெற்றியடையும்

சகலவிதமான மளிகைப் பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

கிளி முருகன் பல்பொருள் வாணிபம்

சில்வா வீதி,
வட்டக்கச்சி.
(சி-2829)
உரிமையாளர்:
வே.ஜெயசீலன்

கலியுகக் கண்ணனின் அருள் வேண்டி நிற்கின்றோம் அளித்திருவாய்.

உங்கள் இல்லங்களில் நடைபெறும் சகலவிதமான விசேட வைபவங்களுக்கு வர்ணப்படம் பிடிக்கவும், வீடியோ படம் பிடிக்கவும், மிக்சிங் செய்து கொள்ளவும் நீங்கள் உடன் நாடவேண்டியது

கிரி வீடியோ அன் போட்டோ

இல.442, 5 ஆம் யுனிற்,
இராமநாதபுரம்.
(சி-2833)
உரிமையாளர்: திரு.சிவகிரி

பார்த்த சாரதியே மக்கள் மனம் மகிழ தேரேறி வருவாய்.

- திருமண விழாவா?
- பூப்புனித நீராட்டு விழாவா?
- பிறந்தநாள் வைபவங்களா?
- கோவில் திருவிழாக்களா?
- பாடசாலை நிகழ்வுகளா?

எவையாயினும் உயிரோவியங்களாகப் படம் பிடிக்கவும், வீடியோ எடுக்கவும் நீங்கள் நாடவேண்டிய இடம்

தாசன் போட்டோ அன் வீடியோ

பிரதான வீதி,
இராமநாதபுரம்.
(சி-2824)

ரதத்திலே வருகின்றான் ரங்கநாதன் அடியார் துன்பங்கள் துடைத்திடுவான்

சகல விதமான சிற்றுண்டிப் பொருட்கள், குளிர்பான வகைகளை தரமான, சுவையான முறையில் பெற்றுக்கொள்ள

சோலைத்தேன் குளிர்களி

182, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.
(சி-2832)
உரிமையாளர்: பொ.ரமேஷ்

# வட்டக்கச்சி

## ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

மாவடம் சிறக்கவும், மனிதர்தம் வாழ்வு தழைக்கவும் அருள்பாலிக்க வருவாய் ஸ்ரீரங்கப் பெருமாளே.

## வட்டக்கச்சி ஸ்ரீரங்கப்பெருமாள் ஆலயம்

பாவவினைகள் போக்க பகவானே தேரேறி வருகிறான்

சுத்தமான கல், மண் நீக்கப் பெற்ற தரமான அரிசியினை - 50kg, 10kg அளவுகளில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் No 1 சிவப்பு நாடு, No 1 சிவப்பு பச்சை, No 1 சிவப்பு உடையல் அரிசி வகைகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**சிவன் அருட்செல்வன் அரிசி ஆலை**

உருத்திரபுரம் வீதி,
கரடிப்போக்கு,
கிளிநொச்சி.



உரிமையாளர்:
சம்பந்தன் அரிசி ஆலை,
இல.93, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.
(சி-2835)

---

வன்னி மக்கள் துயர் தீர்க்கும் ஸ்ரீரங்கநாதப் பெருமாளின் அருள் வேண்டி நிற்கிறோம்.



சகல மருந்து வகைகளையும், பால்மா வகைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**அன்னம் மருந்தகம்**

சந்தையடி,
வட்டக்கச்சி.
(சி-2823)

---

அதர்மத்துக்கு ஆரம்பம்தான் வெற்றி தர்மம் நின்று நிதானித்தே வெற்றியடையும்



உங்கள் வீட்டுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை பெற்றுக்கொள்ள ஒரே சிறந்த இடம்

**மாவடி அம்மன் பல்பொருள் வாணிபம்**

சந்தை உட்புறம்,
வட்டக்கச்சி.
(சி-2822)

---

தமிழர் துயர் தீர்க்க ரங்கநாதப் பெருமாளே தேரேறி வருவாய்



சகலவிதமான மளிகைப் பொருட்களையும் நீங்கள் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள

**கண்ணபிரான் பல்பொருள் வாணிபம்**

சந்தை உட்புறம், வட்டக்கச்சி.
(சி-2821)

---

ஸ்ரீரங்கப்பெருமாளே இனி எங்கள் துணை நீயே.



சகலவிதமான ஆங்கில மருந்துப் பொருட்களையும், பால்மா வகைகளையும் மலிவான விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ள

**மகேஷ் மெடிக்கல் சென்ரர்**

பழைய கண்டிவீதி,
இராமநாதபுரம்.
(சி-2830)
உரிமையாளர்:
இ.இராமசாமி

---

அதர்மத்துக்கு ஆரம்பம்தான் வெற்றி தர்மம் நின்று நிதானித்தே வெற்றியடையும்

சிறந்த முறையில் நெல், புழுங்கல் குற்றவும், அரிசி, குரக்கன், மிளகாய் போன்றவற்றை அரைக்கவும் நீங்கள் உடன் நாடவேண்டிய இடம்



**செல்வரசி அரிசி ஆலை**

ஆறுசந்தி,
இராமநாதபுரம் (சி-2828) உரிமையாளர்: சி.செல்லத்துரை

---



ரதத்திலே வருகின்றான் ரங்கநாதன் அடியார் துன்பங்கள் துடைத்திடுவான்

**மல்லிகை வைத்தியசாலை**

சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி.
(சி-2831)

---

அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காக்க ஸ்ரீரங்கப் பெருமாளே தேரேறி வருவாய்.

அனைத்து மளிகைப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும், மலிவான விலையில் கொள்வனவு செய்ய



**திருத்தணிகை பல்பொருள் வாணிபம்**

சில்வா வீதி,
வட்டக்கச்சி. (சி-2825) உரிமையாளர்: க.இராசரத்தினம்

---



பாண்டவர் துயர் நீக்கிய கண்ணா ஈழ மக்கள் துயர் தீர்க்க தேரேறி வருவாய்

தரமான, சிறந்த அண்ணா கோப்பி, அண்ணா உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு பயன்பெற நீங்கள் நாடவேண்டியது

**அண்ணா கோப்பி தொழிலகம்**

இணுவில், யாழ்ப்பாணம்.
(சி-2826)

---



கலியுக தெய்வமே ஸ்ரீரங்கப் பெருமாளே நாடு செழிக்கத் தேரேறி வருவாய்

நெல், புழுங்கல் என்பன குற்றவும், அரிசி, குரக்கன், மிளகாய் என்பவற்றை அரைக்கவும் நம்பிக்கையுடன் நாடவேண்டியஆலை

**கபிதீபன் அரைக்கும் ஆலை**

(சி-2824)
சில்வா வீதி, வட்டக்கச்சி. உரிமையாளர்: பொ.வேணுகோபால்

---

கார்மேகக் கண்ணனிவன் நம்பினோர் துயர்தீர்க்க தேரேறி வருவாய்

இலத்திரனியல் உபகரணங்கள் (T.V, டெக்) திருத்துதல், ஒளிநாடா வாடகைக்குப் பெறுதல் என்பவற்றுக்கு நீங்கள் நாடவேண்டிய நிறுவனம்



**அலையோசை தொழில்நுட்பவியலகம்**

கரடிப்போக்கு, கிளிநொச்சி. (சி-2836) T.P: 021 -5821

---



குழலூதும் கண்ணா குறைதீர்க்க வருவாய்

சகலவிதமான அழகு சாதனப் பொருட்களுக்கும், எரிபொருள் மற்றும் உந்துருளி உதிரிப்பாகங்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**அறநிலா அழகு மாடம்**

211, சந்தையடி,
வட்டக்கச்சி.

**எரிபொருள் உந்துருளி வாணிபம்**
(சி-2819)